மார்ச் 2021

நம்பிக்கையை விதைத்தல்

பெண்கள் கூட்டமைப்புகள்

மாற்றத்துக்கான பாதைகளை உருவாக்குகின்றனர்

நான்காவது தொகுப்பு

சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்: பெருந்தொற்றுக்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்

Alternatives India
VIKALP sangam

உள்ளடக்கம்

அறிமுகம் 01

1. மக்காம் தில்லி நெருக்கடியைச் சந்திக்க எழுந்தது 04

2. ‘மக்களால் மக்களுக்காக’ சமூக ஒருங்கிணைவு நிறுவன மாதிரி 06

3. குஜராத்திலுள்ள தகோத்தில் காடுபடுபொருள்களைச் சேகரிக்கும் பெண்களின் ஒருங்கிணைவுப் பொருளாதாரம் 09

4. உள்ளூர் உற்பத்தி, சந்தைப்படுத்துதலும் அதன் வலிமையும் : ஸ்ரீலட்சுமி பெண்கள் கூட்டமைப்பு கேரளாவில் வழிகாட்டுகிறது 12

5. பெருந்தொற்றின்போது கொர்ச்சி மகாகிராமசபையின் முன்னெடுப்பு 15

6. கோவிட் நெருக்கடியின் போது இயற்கை வேளாண்மை நோக்கிய நகர்வு: HDRC-ஒரு நிலை ஆய்வு 18

7. உணவும் வேளாண்மையும் சார்ந்து நெகிழ்வுறுதியைக் கட்டமைத்தல் - கோவிட்-19க்கு எதிர்வினையாக உழத்திகளின் முன்னெடுப்பு 21

8. ‘தொழிலாளர்களாக எங்களுக்கு இப்போது ஓர் அடையாளம் உள்ளது’ - நிர்மலாவின் கதை 24

9. யமுனா கத்தரில் கோவிட்19 நெருக்கடிக்கு உழத்திகளின் எதிர்வினை 27

10. கோவிட்19ன் போது உழத்திகளின் மாற்று முறைகள் 30

11. கோவிட்-19 பொதுமுடக்கமும் உழத்தியரும்: இடையீட்டுக்கான தேவை 33

12. கோவிட்-19 காலத்தில் சிறுதானியங்களுக்குத் திரும்புதல் 36

13. பொருளாதார ஹப்பூர் உழத்தியரின் பொருளாதார ஒருங்கிணைவையும் தற்சார்பையும் நோக்கிய பயணம் 39

படிப்பினைகளும் முன்செல்லும் பாதையும் 41

மக்காம்

ஓர் அறிமுகம்

மக்காம் 2014ல் ஏற்படுத்தப்பட்ட தேசியக் கூட்டணி. இதில் உழத்திகளும் பல்வேறு அமைப்புகளும் உறுப்பினராக உள்ளனர். இதன் முக்கிய குறிக்கோள் தேசிய உழவர்கள் கொள்கை 2007ன் படி வரையறுக்கப்பட்டுள்ள அங்கீகாரத்தையும், உரிமைக்குரலையும் உழத்திகளாக இருக்கும் பெண்களுக்கு வழங்குவதே ஆகும். இக்கொள்கை வேளாண்மையிலும் தொடர்படுடைய பிற பணிகளிலும் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், காடுகளில் பணிசெய்பவர்கள், கால்நடை மேய்ப்பர்கள் என்று அனைவரையும் உள்ளடக்கியது. ஆண்வழிச் சமூகத்தைப் பற்றியும் வர்க்கம், சாதி, மதம் ஆகிய பிற சமூக-பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பற்றியும், அவற்றுக்கு இயற்கை வளங்கள் சார்ந்த பெண்களின் பணிகளில் உள்ள தொடர்புகளைப் பற்றியும் ஆழ்ந்த ஆய்வுகள் செய்ய மக்காம் முனைகிறது..

பின்னணி

பெருந்தொற்றும் பொதுமுடக்கமும் உழத்திகளின் பல்வேறு பிரிவினிரிடையே கடுமையான உழைச்சலை விளைவித்ததோடு, முன்னெப்போதையும்விட பெண்களின் ஊதியமற்ற பணிகளை முன்னிலைப்படுத்தியுள்ளன. சாதி, ஆண்வழிச்சமூகம், வர்க்கம், பிற சமூக ஒடுக்குமுறைகள் ஆகியவற்றால் பெண்கள் சந்திக்கும் பாதகங்கள் இந்த உழைச்சலை மேலும் அதிகப்படுத்தின. எல்லாச் சமூக நிலைகளிலும் அதிக வன்முறை நடந்ததாகக் கூறப்படுகிறது. பசி, வருமானமின்மை, உணவும் வேலைவாய்ப்புகளும் இல்லாததால் அதிகமாகிய வேலைப்பளு ஆகியவை இந்திய உழத்திகளிடையே எல்லா மட்டங்களிலும் ஏற்பட்ட துயரை தொகுத்துச்சொல்வனவாக உள்ளன.

உழவு, கூலிவேலை, மீன்வளப்பணிகள், கால்நடை மேய்த்தல், கானகப்பணிகள் எனப் பல்வேறு வாழ்வாதாரச் செயல்பாடுகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். அனைத்து வேளாண் துறைகளைச் சார்ந்த பெண்களும் பெருந்தொற்றின் போது கடும் இன்னலைச் சந்தித்தனர். வேளாண் இடுபொருள்களில் முதலீடு செய்வதற்கு அவர்களிடம் பணம் இருக்கவில்லை. வேளாண் விளைபொருள்களை விற்பதற்கும் வழியில்லாமல், கிடங்குகளும் இல்லாததால் அவை அவர்களது வீடுகளில் கிடந்தன. சந்தைகள் செயல்படாததால் விளைபொருள்கள் பலவும் வீணாகின. தனித்த உழத்திகள் தனியார் வணிகர்கள் மூலமாகவே தங்களது விளைபொருள்களை சந்தைப்படுத்தியதால், குறைந்தபட்ச ஆதரவு விலையும் அவர்களக்குப் பொதுவாகவே கிடைப்பதில்லை. பொதுமுடக்க காலம் மேலும் விலைவீழ்ச்சி ஏற்படுத்தியதால், விளைச்சலுக்கான செலவுகளையே அவர்களால் மீட்க முடியவில்லை. கானகத்தில் பணிசெய்யும் பெண்களும் காடுபடுபொருள்களை இதே காரணங்களால் விற்கமுடியாமல் போனது. பெண்கள் கூட்டமைப்புகள், உழவர்-உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஆகியவற்றின் சந்தைப்படுத்தும் பணிகள் நின்றுபோய், தங்களது செயல்பாடுகளின் தொடர்ச்சி அறுபடாமல் இருக்க கடனையும் சந்தைப்படுத்தும் ஆதரவையும் எதிர்நோக்கியிருந்தனர். வேலைக்கான கோரிக்கை மிகவும் அதிகமாகவே இருந்தது. ஆனாலும் பொதுமுடக்கம் தொடங்கி இரண்டு மாதங்களுக்கு மேலாக மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இது மேலும் இன்னலை அதிகரித்தது. குடும்பத்தில் ஒற்றை ஊதியம் பெறும் பெண்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வீடுதிரும்பிய புலம்பெயர்ந்தவர்களோடு கூலிவேலைக்காக அவர்கள் போட்டியிடவேண்டியிருந்தது.

மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் வேறு பல மாநிலங்களிலும் மக்காமின் கூட்டாளிகள் செய்த ஆய்வுகளின்படி பெரும்பாலான உழத்திகள் பிரதமர் வறுமை ஒழிப்புத் திட்டம் (PMGKY) மூலமாக எந்த நிவாரணமும் பெறிவில்லை என்பதைக் காட்டின. ஆவணங்கள், வங்கிக் கணக்குகள் ஆகியவை இல்லாததாலும் நிலம் தங்களது பெயிரில் இல்லாததாலும் பெண்களுக்கு நிவாரணங்கள் கிடைக்காமலே போனது.

ஆனால் எல்லா விளைவுகளும் எதிர்மறையானவையாக இருக்கவில்லை என்பதையும் இங்குள்ள கட்டுரைகள் காட்டுகின்றன.

பல தடைகளுக்கிடையிலும், உழத்திகளும் அவர்களது கூட்டமைப்புகளும் புத்தாக்கச்செயல்கள் புரிந்து, பசியையும் வேலைவாய்ப்பின்மையையும் வெற்றிகரமாக எதிர்கொண்ட பல நிகழ்வுகள் உள்ளன.

.

இக்குறிப்புகள் நமக்குச் சொல்லதென்ன

உழத்திகள் கூட்டமைப்புகள் உணவையும் வேலைவாய்ப்புகளையும் உறுதிசெய்வதற்காக முன்னின்று செயல்பட்டதைக் கூறும் குறிப்புகளின் தொகுப்பு இது.

இதிலுள்ள பத்து சான்றுகளும் பெண்கள் கூட்டமைப்புகள், கிராமக் குழுக்கள், தனிப்பட்ட உழத்திகள் ஆகியோர் மக்களுக்கு நிவாரண உதவிகள் நல்க முன்வந்ததைக் காட்டுகின்றன. சில சமயங்களில் அவர்கள் அரசாங்கத்துக்கு உதவி புரிய முன்வந்தன. ஆனால் பல நேரங்களில் உள்ளூர், மாநில, நடுவண் அரசுகளோடுப் போராடிப் போதிய உதவிகள் கிடைக்கச் செய்தனர். குஜராத், மகாராட்டிரம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், தில்லி, உத்திரப் பிரதேசம் முதலிய மாநிலங்களிலுள்ள பதின்மூன்று சான்றுகள் இவை.

பெண்கள் வழிநடத்திய இந்த முன்னெடுப்புகள் அடிமட்டத்தில் கூட்டுணர்வின் அடிப்படையில் அமைந்த பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு வழிகோலின. இடர்ப்பாடுகளின் போது நிவாரணம் வழங்குவதிலும், அரசுடன் போராடுவதிலும், உள்ளூர்ச் சமூகங்களை அணிதிரட்டுவதிலும் சாதாரண மக்கள் எப்படி அசாதாரணமான பணிகளைச் செய்துள்ளனர் என்பதை இக்குறிப்புகள் காட்டுகின்றன.

தற்சார்பும் சமூக உற்பத்தியும் சமூக ஒருங்குதிரள்வும் இந்த சோதனையான நேரத்தில் இன்றியமையாதனவாக இருந்திருக்கின்றன. உதாரணமாக, பணத்திற்குப் பதிலாக பண்டமாற்று முறை செயல்படுத்தப்பட்டது. ஊராட்சிகள் முன்வந்து வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உணவு மூலம் நிவாரணம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தின. இச்சான்றுகள் சமூக ஒருங்கிணைவுப் பொருளாதாரம் நோக்கிய நகர்வுக்கான களத்தையும் வாய்ப்பையும் வழங்குகின்றன; இவை வெறும் பணப்பரிமாற்றத்தை மட்டுமே நம்பியிராமல், ஒருவருக்கொருவர் உதவுவதன் மூலமாக பண்டங்களையும் சேவைகளையும் புழக்கத்தில் வைத்திருக்கின்றன.

இங்கு ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் பல நிகழ்வுகளைப் பற்றி உரையாட உதவியான ஒரு கருத்தாக்கம் நெகிழ்வுறுதி. தெரிவுகள் இல்லாத சூழலுக்கு ஏற்றவாறு இசைந்துபோவது என்ற சிந்தனையைத் தாண்டி இக்கருத்தாக்கம் செல்கிறது. நெகிழ்வுறுதி குறித்த பெண்ணியப் புரிதல் என்பது அதிகாரம், சமூகநீதி ஆகிய பிரச்சனைகளை அங்கீகரித்து, நெகிழ்வுறுதியை எதையும் எதிர்கொள்ளும் திறனாகப் பார்க்கிறது; அதாவது, நேர்மறை விளைவுகளுக்காகப் புத்தாக்கம் செய்யும் திறனாகப் பார்க்கிறது. இன்னல்களின்போது மனித அனுபவத்தைப் புரிந்துகொள்ளவும், கொள்கையையும் செயல்பாடுகளையும் நெறிப்படுத்தவும் அது பயன்படுவதைக் காண்கிறோம்.

நெகிழ்வுறுதி பற்றிய பெண்ணியப் பார்வை தற்போதைய பெருந்தொற்று போன்றதொரு பேரிடரின் போது தேவைப்படும் ஒருங்கிணைப்புக்குத்

தேவையான இணக்கமேற்படுத்தும் செயல்முறைகளை அங்கீகரிப்பதோடு, ஏற்கனவே சமூகத்தைக் கட்டமைத்துள்ள சாதி, ஆண்வழிமரபு, வர்க்கம் ஆகியவற்றையும் கணக்கில் கொள்கிறது.

இந்த நெகிழ்வுறுதியும் புத்தாக்கத் திறனும் படைப்பூக்கத்துடன் தகவமைத்துக்கொள்தலும் பெண்கள் உரிமையும் அதிகாரமும் பெறச்செய்யும் அகண்ட செய்முறையின் பகுதியாக இருப்பதை நிலை ஆய்வுகள் காட்டுகின்றன. சமூகக்குழுக்களுக்கும் அவற்றோடு பணியாற்றும் நிறுவனங்களுக்கும் இடையில் ஒன்றுக்கொன்று வளப்படுத்தும் செய்முறைகளின் கதைகளை இங்குள்ள ஒவ்வொரு முன்னெடுப்பும் கூறுகின்றன.

முன்னகர்வதற்கான பாதை

மக்காம் ஒரு கூட்டமைப்பாக நிவாரணங்கள் வழங்கும் களப்பணிகளும் ஆற்றியது; தேசிய மனித உரிமைக் கழகம், நிதி அயோக், மாநில அரசுகள் போன்றவற்றோடும் பணியாற்றியது - உணவு, வேலைவாய்ப்பு சார்ந்த பொது அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தது. பொது விநியோகத் துறை மூலம் உணவு வழங்கும் அமைப்பு எல்லாருக்குமானதாக இருக்கவேண்டும் என்றும் ஆவணங்கள் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமேயானதாக இருக்கலாகாது என்றும் வலியுறுத்திக் கோரிக்கைகள் வைத்தனர். அத்திட்டம் அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் மட்டுமன்றி பிற ஊட்டச்சத்துமிக்க உணவுவகைகளைச் சேர்க்க வேண்டும். பொதுப்பணித் திட்டங்களை விரிவுப்படுத்தி உழத்திகள் உட்பட அனைவருக்கும் வேலைவாய்ப்பை உறுதிசெய்யவேண்டும் என்பதும் மக்காமின் ஒரு முக்கிய கோரிக்கை.

நீண்டகால நோக்கில், சூழலியலுக்கு ஏற்ற பெண்களின் ஊரக வாழ்வாதாரங்களை மீளமைத்து, ஆதரவு நல்கி வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இதைக் காணலாம். ஆனால் வேளாண்மை, நீர், பெண்கள் சார்ந்துள்ள பிற பொதுவளங்கள் ஆகியவற்றில் முதலீடுகளும், அவற்றைப் பெண்களிடமிருந்து பறிக்காமல் அவர்கள் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் கொள்கைகளும் தேவைப்படுகின்றன. பெண்களின் மனித உரிமைகள் மீது கவனத்தைக் குவித்து, அதிகாரம், வளங்கள் ஆகியவற்றைக் குறித்த சிந்தனைகளை மாற்றி, அவற்றை மறுபங்கீடு செய்வதன்மூலம் தற்போதைய வளர்ச்சி முறையை மாற்றியமைக்கும் தொலைநோக்கு தேவைப்படுகிறது.

கோவிட் தொற்றுக்குப் பிறகான இந்தியாவில் வாழ்வாதாரங்களை மீளமைக்கவும், சமூக, பொருளாதார ஒருங்கிணைவை வலுப்படுத்தும் வழிகளைக் கண்டடையவும் இந்த எடுத்துக்காட்டுகள் முதன்மையான படிப்பினைகளைக் கொண்டுள்ளன என்று நம்புகிறோம்.

1. மக்காம் தில்லி நெருக்கடியைச் சந்திக்க எழுந்தது

எழுதியவர்கள்: டாக்டர் சோமா கே.பி., சுலேகா (ஏக்சன் இந்தியா), முபாசிரா சைதி

மார்ச் 2020ல் தில்லியில் பொதுமுடக்கம் கொண்டுவரப்பட்ட சமயத்தில் மக்காம் தில்லி உருவானது. பிப்ரவரி 2020ல் கிழக்கு தில்லியில் நேர்ந்த கலவரங்களின் பின்னணியில் நாங்கள் ஒன்று கூடினோம். எங்களில் பலரும் தில்லியில் இருப்பவர்கள். மக்காமின் பணிகளில் பல்வேறு நிலைகளில் தொடர்புடையவர்கள். எனினும் நாங்கள் ஓர் அணியாகச் சேர்ந்தது, நெருக்கடிக்காலத்தில் தில்லியிலும் அருகிலுள்ள பகுதிகளிலும் சமூகக்குழுக்களுக்கு எங்கள் கூட்டு முயற்சிகளின் மூலம் ஆதரவு நல்கவேண்டும் என்கிற எண்ணம் தோன்றிய பிறகே ஒன்று கூடினோம். வட மாநிலங்களில் உள்ள எங்களது சகோதரிகள் அவர்களது பகுதிகளில் பசியை நீக்கி நெகிழ்வுறுதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும் எங்களால் உதவிக்கரம் நீட்ட முடிந்தது.

தில்லியின் பஸ்திகள்/குடியிருப்புகளில் உள்ள மக்கள் தில்லிக்குப் புலம்பெயர்ந்தவர்களாகவோ தில்லியின் ஏழைக் குடியிருப்புகளில் வாழ்ந்துவந்தவர்களாகவோ இருப்பர்; நகரத்துக்குள் இருந்த தங்களது குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்பட்டு நகரத்தின் புறத்தே இருந்தே குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டவர்களாக இருப்பர். பொதுமுடக்கம் மிக விரைவிலேயே அவர்களைப் பெருந்துயர் நோக்கித் தள்ளியது. அவர்களது தினக்கூலியை அவர்கள் இழந்தனர். எனவே, ஓரிரு வாரங்களிலேயே பட்டினியும் வறுமையும் அவர்களை வாட்டும் சூழல் ஏற்பட்டது. அவர்களில் பலரும் ஆட்டோ ஓட்டுநர்கள், வீட்டுப் பணியாளர்கள், காய்கறி விற்பவர்கள், பெட்டிக் கடைகளை நடத்துபவர்கள், இல்லத்தரசிகள். அவர்களது நுகர்வு தினப்படி வருமானத்தை நம்பியே இருந்ததால், திடீர்ப் பொதுமுடக்கம் அவர்களை ஒரு நெருக்கடியை நோக்கித் தள்ளியது. பட்டினி உடனடி அச்சுறுத்தலானது. வாடகைக்குக் குடியிருந்தவர்களுக்கும் வீடுகளைவிட்டு வெளியேற்றப்படும் நிலையும் அச்சுறுத்தியது.

மக்காமோடு தொடர்புடைய அமைப்புகள் - ஏக்சன் இந்தியாவின் மகிளா பஞ்சாயத்தும், சப்லா சங்கக் கிளைகளும் 2020 மார்ச் மாதத் தொடக்கத்திலேயே பொதுமுடக்கத்தின் வருகையை உணர்ந்து செயலில் ஈடுபடத்தொடங்கினர். பெண்களின் தலைமையிலான குடும்பங்களுக்கு பெருந்தொற்று நெருக்கடியை ஒருசில மாதங்களுக்குச் சமாளிப்பதற்குத் தேவையான உணவையும் அத்தியாவசியப் பொருள்களையும் கொண்ட பொட்டலங்களை வழங்கினர். நகரத்தின் 12 இடங்களில் பஸ்திகளிலும் சேரிகளிலும் குடியிருந்த நகர்ப்புற ஏழைகளையும் புலம்பெயர்ந்த கிராமப்புற ஏழைகளையும் அவர்களும் பிறரும் நாடிச்சென்றனர். நகரின் சுற்றுவட்டாரங்களில் இருந்த உழவர்களுக்கும், நாடோடி ஆயர்களுக்கும், சிறு வணிகர்களுக்கும் உதவ முன்வந்தனர். அரசின் பொது வினியோக அமைப்புகளோடும் பிற நிவாரணக் குழுக்களோடும் சேர்ந்து ஆதரவற்ற இந்த மக்களுக்கு உணவும் பிற நிவாரணங்களும் வழங்குவதற்கான தகவல்பரிமாற்ற முறைகளையும் பிற அமைப்புகளையும் ஏற்படுத்தவதே முதல் பணியாக இருந்தது. மிகவும் பாதிக்கப்பட்டோரின் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. நிவாரணக்குழுக்களுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டு, நகரெங்கும் உணவும் பிற பொருள்களும் எடுத்துச்செல்லப்பட்டன. எங்கிருந்தெல்லாம் அவசர அழைப்புகள் வந்தனவோ அங்கெல்லாம் தில்லி நிவாரணக் குழுக்களின் துணையோடு உதவி வழங்கப்பட்டது. எந்தவித ஆவணங்களும் இல்லாமல் நகருக்கு அந்நியமாக இருந்தவர்களுக்கும் உதவிகள் சென்றடைந்தன. ஊரகப் பகுதிகளிலிருந்த பெண்கள் கூட்டமைப்புகள் நடத்தும் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட சுகாதாரப் பட்டைகள் பஸ்திகளில் இருந்த சிறுமிகளுக்கும், இளம் பெண்களுக்கும் பெரும்பாலும் இலவசமாக வழங்கப்பட்டன. பள்ளி, கல்லூரி மாணவர்களும்

இப்பணியில் இணைந்துகொண்டனர். விரைவில் மாநில அரசும் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரண முயற்சிகளைச் சார்ந்திருக்கத் தொடங்கியது. பொது விநியோகப் பொருள்களும் மருத்துச் சேவைகளும் வழங்க அரசுக்குழுக்களும் நிவாரணக் கூட்டமைப்புகளை நாடத்தொடங்கின.

தில்லி மக்காமின் முயற்சிகளால், தில்லியிலுள்ள 5600 குடும்பங்களைச் சென்றடைந்து 4 மாத காலத்துக்கு பொது விநியோக நிவாரணப் பொருள்கள் வழங்கி, 100 குழந்தைகளுக்குக் கூடுதல் உணவு கொடுக்க முடிந்தது. இவற்றில் நான்கிலொரு பகுதிப் பணிகள் கூன்ஞ்ச் அமைப்பபின் ஆதரவில் நடந்தன. பெரும்பகுதி தில்லி நிவாரணக் குழுக்களிடமிருந்து திரட்டப்பட்ட பங்களிப்புகளால் நிகழ்ந்தன. நிர்வாகத்தின் கண்களுக்குத் தெரியாத (நகரத்திலிருந்த) கிராம மக்களைச் சென்றடைய மேலும் ஒருங்கிணைப்பு தேவைப்பட்டது.

தில்லி நிவாரணக் கூட்டமைப்பு மற்றும் பிற தனிப்பட்ட கொடையாளர்கள் மூலமாகப் பிற மாநிலங்களுக்கும் விதைகள், உணவு, தானியங்கள் ஆகியவற்றை 400 தனித்த பெண்களுக்கு வழங்க முடிந்தது; தில்லியில் குறுதொழில், வீட்டு நிவாரணத்துக்குக் கிடைத்த சிறு மானியங்களும் உதவின. பல புலம்பெயர் தொழிலாளர்கள் பிகார், அசாம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்குத் திரும்பவும், தில்லியில் 4000 மக்களுக்கு தங்குமிடம் தரவும் இந்த அணி ஒருங்கிணைப்புப் பணிகள் செய்தது. வீட்டுத் தோட்டங்கள் அமைப்பது, பல்லுயிரியம் பேணுவது, நகரின் சில் பகுதிகளிலிருந்த பூங்காக்களிலும் பொது இடங்களிலும் இயற்கை மக்கு உரங்கள் தயாரிப்பது போன்றவற்றைப்பற்றிப் பரப்புரையாற்றவும் உறுப்பினர்கள் முன்னெடுப்புகள் மேற்கொண்டனர்.

பொதுமுடக்கம் தளர்த்தப்பட்ட பின்னும், ஒருங்குதிரளல், ஒன்றிணைதல் குறித்த கூட்டுணர்வுவை நிவாரணப் பணிகள் ஏற்படுத்தியன. இதன் தொடர்ச்சியாக, மேலும் உதவிகள் செய்யப்படுகின்றன. பழங்குடி, தலித் மக்களுக்கு முன்னிரிமை வழங்கப்படுகிறது. கோவிட் தொற்று தொடர்வதால், விதைகள் வாங்கவும், தனித்த பெண்கள் சிறுதொழில்கள் தொடங்கவும், வேலை தேடவும், மருத்துவ உதவி பெறவும் தொடர்ந்து ஆதரவு வழங்கப்படுகிறது.

கறிமசால் பொருள்கள், கோதுமை, குறைந்த விலை சுகாதாரப் பட்டைகள்/துண்டுகள் ஆகியவற்றை வழங்க நகர்ப்புற-கிராம விநியோகச் சங்கிலிகளைப் பெண்கள் இப்போது ஏற்படுத்துகின்றனர். இத்தகைய முயற்சிகள் தொடர்ந்து நீடிக்கும் என்றும், பெருந்துயரிலிருந்து மீள்வதற்கு நிவாரணம் வழங்கும் என்றும் நம்பிக்கை உள்ளது.

பொதுமுடக்கத்தைச் சமாளித்த சமூகக் குழுக்களும், பல இடங்களில் தனித்த பெண்களும் காட்டிய நெகிழ்வுறுதி முன்யோசனையாலும், விரைவான எதிர்வினைகளாலும், பல தரப்புகளில் நிவாரணத்துக்குக் கிடைத்த பேரதரவாலும் சாத்தியமானது. நெகிழ்வுறுதியான எதிர்காலத்துக்கான நம்பிக்கையையும் இது வழங்குகிறது.

2. 'மக்களால் மக்களுக்காக' சமூக ஒருங்கிணைவு நிறுவன மாதிரி

எழுதியவர்கள்: நஃபீசா பரோட், பல்லவி சோப்டி ராஜ்பால்

ஒளிப்பட உதவி : உத்தன்

குஜராத்தில் மகுவா வட்டம், ரடோல் கிராமத்தில் விநியோகம்

பாலினம்சார் அக்கறையுடன் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உரிமையும் அதிகாரமும் வழங்கும் களப்பணிகளை குஜராத்தின் வறட்சியான கடலோர மாவட்டங்களிலும் ஏழ்மையான பழங்குடி மாவட்டங்களிலும் கடந்த 40 ஆண்டுகளாகச் செய்துவருகின்றனர் 'உத்தன்' அமைப்பினர். இன்று குஜராத்தின் 6 மாவட்டங்களிலுள்ள 412 கிராமங்களில் 14 லட்சம்+ மக்களை அப்பணிகள் சென்றடைகின்றன.

அதிகாரப்படுத்தலையும் எல்லாரையும் உள்ளடக்கிய வளர்ச்சி முறைகளையும் தொடர்ந்து சுதந்திரமாகச் செயல்படுத்தக்கூடிய பெண்கள் பேரவைகளை அமைப்பது ஒரு முக்கிய உத்தியாக எழுந்துள்ளது. அத்தகைய ஐந்து பேரவைகள் கிராமப் பெண்களுக்கும் விளிம்புநிலையினர்க்கும் உரிமைகள் பெற்றுத்தரப் பணியாற்றும் சமூக நிறுவனங்களாக வளர்ந்துள்ளன. 8000+ உறுப்பினர்களில் கணிசமானோர் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு போன்ற துறைகளில் சோதனைமுயற்சிகள் செய்துள்ளனர்; அதே சமயம், தனியார்/பொது வளங்களின் மீதான தங்கள் உரிமைகளையும் உழவர்கள் என்ற தங்கள் அடையாளத்தையும் 15 ஆண்டுகளாக உறுதிப்படுத்திவருகின்றனர்.

கோவிட் பொதுமுடக்கத்துக்குப் பிறகு, ஏற்கனவே விளிம்புநிலையிலிருந்தவர்களின் தட்டுகளிலேயே திடீர்ப் பொதுமுடக்கத்தின் முதல் தாக்கங்கள் தெரியத்தொடங்குவதை உத்தனின் சமூகத்தொடர்புகள் வெளிப்படுத்தின. உணவு, காய்கறிகளின் விநியோகச்சங்கிலிகள் தடைப்பட்ட நிலையில், பணப்பற்றாக்குறை நிலவிய குடும்பங்களில் உணவு குறித்தான அச்சம் அதிகமாக இருந்தது. அரசாங்கத்தின் நோக்கம் நல்லதாக இருப்பினும், புலம்பெயர்ந்தவர்கள் திரும்பியதால் அதிகரித்திருந்த மொத்தத் தேவையை நிறைவு செய்வதில் இடைவெளி இருப்பதாக களத்திலிருந்து திரட்டப்பட்ட தரவுகள் காட்டுகின்றன. தான்பூர் வட்டத்தின் ராஜயவான்

ஒளிப்பட உதவி : உத்தன்

சக்குபென், நிவாரணக் கூட்டாளி (இடது) வலிபென், உழத்தி (வலது) - ராஜ்யவன் கிராமம், தன்பூர் வட்டம், தகோத் மாவட்டம், குஜராத்

கிராமத்தைச்சேர்ந்த வலிபென் பலாஷ் தனது கோதுமையையும் மக்காச்சோளத்தையும் விற்பது எப்படி என்று கவலைகொண்டிருந்தார். தனித்த பெண்கள் போக்குவரத்துக்கும் நியாய விலை பெறுவதற்கும் பல சிக்கல்களைச் சந்தித்தனர். 24% உழவர்கள்தாம் தங்கள் குளிர்காலப் பயிர்களை விற்கமுடிந்தது. 40% உழவர்கள் 2020 ஜூலை மாதத்துக்கான பிரதமரின் விவசாயிகள் நிதியைப் பெறவில்லை.

பெண்கள் தலைவர்களுடனான உரையாடல்கள் வாயிலாக மக்களால் மக்களுக்காகச் சமூக ஒருங்கிணைவு நிறுவன மாதிரியை நிவாரண முன்னெடுப்புகளில் செயல்படுத்துவதற்கு இந்த இடரைப் பயன்படுத்துவது என்று முடிவுசெய்யப்பட்டது. சமூகத் தலைவர்களோடு கலந்தாலோசித்தல், பாதிப்புக்காளாகக்கூடியவர்களுக்கு அதிகாரம் வழங்கல், பல்வேறு குழுக்களிடையே நட்பினை ஏற்படுத்தல் ஆகியவற்றை ஒருங்கிணைவின் மூலம் செய்வதே இதன் நோக்கம். நிவாரண உதவிகள் மூலம் ரேசன் பொருள்களும் அத்தியாவசியப் பொருள்களும் பாவ்நகர், தகோட், பஞ்ச்மகல், மகிசாகர் மாவட்டங்களிலுள்ள 139 கிராமங்களுக்கும் ஒருங்கிணைவினால் கிடைக்கச்செய்வதே இம்மாதிரியின் அடிப்படை. தேவையான உணவு தானியங்கள் அத்தனையும் உழத்திகளிடமிருந்தும், வேளாண்தொழில்முனைவோரிடமிருந்தும் நேரடியாக வாங்குதென்று முடிவுசெய்யப்பட்டது; இல்லையேல் அவர்களுக்கிருந்த பண இக்கட்டில் அவர்கள் கிடைத்த விலைக்கு விற்றிருப்பார்கள். 120 கிராமங்களில் பொது விநியோகம் மூலமாகவும் அன்ன பிரம்ம யோஜனா மூலமாகவும் வழங்கப்பட்ட உணவுப் பொட்டலங்களைப் பெறுவதிலிருந்த இடைவெளிகளைக் காட்டும் தரவாய்வினைத் தொடர்புடைய வட்ட, மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்கினர். கிராமப் பெரியவர்களோடு உரையாடல் மேற்கொள்ளப்பட்டது. கிராமப் பெரியோர், ஊராட்சித் தலைவர்கள், பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் துணையோடு பாதிப்படையக்கூடிய குடும்பங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. தங்கள் கிராமங்களில் தங்களது தானியங்களை விற்கச் சிரமப்பட்டுவந்த உழவர்கள் தலைவிகள் மூலமும் கிராம வளர்ச்சிக் குழுக்கள் மூலமும் அணுகப்பட்டனர். உத்தனினுக்கிருந்த நல்லுறவு, உழத்திகளோடு ஏற்கனவே இருந்த இடையீடுகள், பொருத்தமான விலை ஆகியவை இதை எளிமையாக்கின. விளைபொருள்களை வாங்கியபிறகு அதற்கான தொகை பெண்களின் சேமிப்புக் கணக்குகளில் போடப்பட்டது; அவர்கள் பெரும்பாலும் நிலத்தின் உரிமையாளர்களாக இருக்கமாட்டார்கள்; ஆனால் அவர்களே நிலத்தை வியர்வையைச் சிந்தி உழுதுகொண்டிருப்பார்கள். கடைகளிலிருந்து வாங்குவதைவிட தனிப்பட்ட முறையில் பெண்களிடமிருந்து நேரடியாக வாங்குவது அதிக நேரம் பிடித்ததெனினும் விற்கும் தேவைகொண்டோரையும் வாங்கும் தேவைகொண்டோரையும் இணைத்தது. வலிபென் தனது விளைபொருளுக்கு கிலோவுக்கு ரூ.19 கிடைத்ததால் நிம்மதியாக இருந்தார்; சாதாரண நேரங்களில் சந்தையில் விற்றிருந்தால் கிலோவுக்கு ரூ.20-22 கிடைத்திருக்கும். ஆனால் போக்குவரத்துக்கு ஆகியிருக்கும் 5 ரூபாய் மீதமானது. "உள்ளூரிலேயே விற்றதால் இந்தப் பணம் எனக்கு மிச்சமானது," என்றார்.

சேமிக்கப்பட்ட தானியங்களை சமூகக்குழுத் தலைவர்களும் உத்தன் அணியினரும் தனித்தனிப் பொட்டலங்களாக்கினர். இளைஞர்களின் துணையோடும் ஊராட்சிகள் மூலமாகவும் அவை பகிர்ந்தளிக்கப்பட்டன. ரூ.54,27,000 மதிப்புள்ள உணவுப்பொருள்களை இந்த ஒருங்கிணைவின்மூலம் வழங்கமுடிந்தது. 78 உழத்திகள் 44136 கிலோ தானியங்களை இந்த முன்னெடுப்புக்கு விற்று, ரூ.9,12,980 வருமானம் ஈட்டினர். இந்தத் தொகை மீண்டும் பெண்களின் சேமிப்புக்கணக்குகள் வாயிலாக உள்ளூர் பொருளாதாரத்துக்குள் சுழற்சிக்கு வந்தது. ஒப்புநோக்க, பெண்கள் தங்கள் வீட்டு வாசற்படியிலேயே விற்றது மூலம் எந்த உழல்தலுமின்றி நியாய விலை பெற்று 16% அதிக பலன் பெற்றனர். உழத்திகள் பலரும், “எங்களது பயிர்கள் எங்கள் கிராமத்திலுள்ள பலருக்கே உதவியாக உள்ளது எங்களுக்கு நிறைவாக உள்ளது. எனவே இது கூடுதல் மதிப்புள்ள வருமானம்,” என்றனர். இன்னொரு நிறைவான குறிப்பு, மேலும் சில உழத்திகள் இந்த முன்னெடுப்புக்கும் கூடத் தங்களது விளைச்சலை விற்க மறுத்தனர் - தங்களது நுகர்வுக்கே அவை போதுமானதாக இருக்கும் என்பதால்.

பெண்கள் பேரவைத் தலைவர்கள் எப்போதுமே இக்கேள்வியை எழுப்பியுள்ளனர்: “நாங்கள் ஏன் வெளியாட்களுக்கு விற்று, பொது விநியோகம் மூலம் அதுவே எங்களுக்கு வெளியிலிருந்து திரும்பிவர வேண்டும்? உள்ளூர்ப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதைப் பற்றி ஏன் அரசாங்கம் சிந்திக்கக்கூடாது?” பல பெண்ணியர்களும் சில பொருளாதார அறிஞர்களும் இதே கருத்தை எதிரொலித்துள்ளனர். இந்த மாதிரியை பெரிய அளவில் செயல்படுத்துவதன்மூலம், அரசாங்கம் எல்லாத் தானியங்களையும் வாங்கி உள்ளூரிலேயே சேமித்துப் பகிர்ந்தளிக்கும் என்றால், உணவுப் பாதுப்பின்மையைக் குறைத்து, உணவுப்பொருள்கள் சரியான நேரத்துக்குக் கிடைக்க வழிவகுத்து, அவசரத்தில் இழப்புக்கு விற்பதைத் தவிர்த்து, போக்குவரத்தையும் குறைத்து ஆற்றலைச் சேமிக்கலாம். சமூகத்தின் உணவுத்தட்டுகளில் உள்ளூர்ச் சுவையும் உறுதிசெய்யப்படும்.

ஒளிப்பட உதவி : உத்தன்

சமர்த்தன் மகிளா சங்காத்தன் அலுவலகத்தில் உழத்திகளின் விளைபொருள்களைப் பொட்டலங்களில் கட்டும் கீதாபென்

3. குஜராத்திலுள்ள தகோத்தில் காடுபடுபொருள்களைச் சேகரிக்கும் பெண்களின் ஒருங்கிணைவுப் பொருளாதாரம்

எழுதியவர்கள்: சேஜல் தண்ட், நீட்டா ஹர்திகர்

ஒளிப்பட உதவி: ஆனந்தி

ரஸ்கம் மண்டிலியின் மகுவா மலர் சேகரிப்பு மையம், ஜம்ரன் கிராமம்

ரத்தன்மகல் ஆதிவாசி மகிளா சஜீவ் கேத் உட்பக்கக்கானே வேச்சன் மண்டிலி (RASKUM - ரஸ்கம்) வேளாண்மையும் காடுபடுபொருள் உற்பத்தியும் செய்யும் பழங்குடிப் பெண்களின் கூட்டமைப்பு. இது 2008ம் ஆண்டு ஆனந்தி, திவேகத் மகிளா சங்காத்தன் ஆகிய அமைப்புகளின் ஆதரவுடன் நிறுவப்பட்டது. இதில் குஜராத்திலுள்ள தகோத் மாவட்டத்தின் திவேகத் பரியா வட்டத்தைச் சேர்ந்த 572 உறுப்பினர்கள் உள்ளனர். மேற்கு இந்தியாவில் குஜராத்தின் அரைப்பாலைநிலப் பகுதிகளின் கீழ்க்கோடியில் உள்ள மாவட்டம் தகோத். இதன் மக்கள்தொகையில் 75% பட்டியலினப் பழங்குடியினர் உள்ளனர். இந்தியாவின் மிக ஏழ்மையான 200 மாவட்டங்களில் இது ஒன்று. இங்கிருந்து புலம்பெயர்தல் வாழ்வாதாரத்துக்கான வழியாக உள்ளது.

ஆனந்தி - ANANDI (Area Networking and Development Initiatives) என்ற பெண்ணிய நிறுவனம் கிராமப் பெண்களின் தலைமையில் சமூக மாற்றத்தைக் கொண்டுவர விழிப்புணர்வைக் கூட்டுதல், ஒருமித்த முடிவுகளை அடைதல், கூட்டாகப் பிரச்சனைகளைத் தீர்த்தல் என்பவற்றை உத்திகளாக வலியுறுத்துகிறது. ரத்தன்மகல் மண்டிலி எனவும் அழைக்கப்படும் ரஸ்கம், ஆனந்தியுடன் பணிசெய்யும் ஏழு கூட்டமைப்புகளில் ஒன்று. இயற்கை வேளாண் பொருள்களையும் காடுபடுபொருள்களையும் செப்பனிடுதல், காய்கறி பயிரிடுதல், இயற்கை உணவு உற்பத்தி ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இடையீட்டுக்கான தேவை

2020ம் ஆண்டு பொதுமுடக்கத்தின் இருந்த மார்ச் முதல் மே மாதங்கள் காடுபடுபொருள் சேகரிப்போரின் வாழ்வாதாரத்துக்கான உச்சப் பருவம். இப்பருவத்தில்தான் திம்ரு இலைகளும் மகுவா (இலுப்பை) மலர்களும் சேகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. குஜராத் மாநில காடு வளர்ச்சி நிறுவனத்தாலும் தனியார் வணிகர்களாலும் இப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சேகரிப்பு மையங்கள் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளால் பெருமளவு

ஒளிப்பட உதவி: ஆனந்தி

தேவ்லிகுவா கிராமத்தைச் சேர்ந்த நந்தாபென் தனது பெயரில் வெற்றிகரமாகக் கோரியுள்ள வனவுரிமை நிலத்தில் விளைந்த மரபுவகைப் பயிர்களுடன்

குறைக்கப்பட்டன. காடுறை சமூகங்களுக்கு இதுவரை கண்டிராத நெருக்கடி ஏற்பட்டது. ஏனெனில் இக்காடுபடு பொருள்களிலிருந்தே அவர்களுக்குப் பெருமளவு வருமானம் வந்துகொண்டிருந்தது.

இந்திய அரசாங்கத்தின் TRIFED துறை இலுப்பைப் பூக்களின் விலையை கிலோவுக்கு ரூ.17லிருந்து ரூ.30க்கு உயர்த்தி, பழங்குடியினர் நியாயமான விலை பெறுவதை உறுதிசெய்தது. ஆனால் சேகரிப்புக்கு எந்தவிதமிதமான கட்டுப்பாடும் இயங்குமுறையும் இல்லாத நிலையில், உள்ளூரில் கிடைத்த விலை கிலோவுக்கு ரூ.17 முதல் ரூ.20வரையே இப்பருவம் முழுதும் இருந்தது.

பழங்குடி உழத்திகளின் உழவர்-உற்பத்தியாளர் நிறுவனம் மண்புழு உரத் உற்பத்தியிலும் விற்பனையிலும், இயற்கை விதைகள் விநியோகத்திலும் உள்ளூரில் சமையல் தொழிலிலும் பொதுவாக ஈடுபட்டிருந்த நிலையில், 2020 மே மாதம் 9ம் நாள், ஆனந்தியின் செயற்குழுவோடு தொலைப்பேசியில் காடுபடுபொருள் சேகரிப்போரின் சிக்கல்களைப்பற்றிப் பேசினர். ஆனந்தி நிர்வாக ஆதரவு வழங்க உறுதியளித்தது. இது மண்டலியை அவர்களது சமூகக்குழுவையும் காடுபடுபொருள் சேகரிப்போரையும் ஆதரிப்பதற்கு முடிவெடுக்க உதவியது. ஆனால், இதன் விளைவாக உறுப்பினர் இலுப்பைப் பூக்களுக்கு அதிக சந்தை விலையை இரண்டு நாட்களுக்குள்ளாகக் கண்டடைய வேண்டியிருந்தது.

ரத்தன்மகல் மண்டலியின் செயற்குழு உறுப்பினர்கள் இலுப்பைப் பூக்களை வாங்குவதற்கு மூன்று மையங்களை அவர்களது பெரும்பாலான உறுப்பினர்கள் இருந்த கிராமங்களில் அமைத்தனர். அதே சமயம் உள்ளூர்ச் காடுபடுபொருள்களுக்கான உள்ளூர்ச் சந்தைகளையும் தேடினர். சற்று முயன்றபின், காயவைத்த இலுப்பை பூக்களுக்கு கிலோவுக்கு ரூ.40 வழங்க முன்வந்த ஒரு வணிகரைக் கண்டனர். செயற்குழு உறுப்பினர்கள் இந்த முழுச் செயலையும் தன்னார்வத்தோடு செய்தனர். மண்டலி இதனை இலாப நோக்கின்றி நடத்துவதென்றும் அப்போதுதான் காடுபடுபொருள் சேகரிப்போருக்கு இந்த இக்கட்டான காலங்களில் சிறந்த வருமானம் ஈட்டமுடியும் என்றும் முடிவுசெய்தனர். பொதுமுடக்கத்தின்போது காடுபடுபொருள் சேகரிப்பவர்கள் காடுகளுக்குள் செல்வதற்கு வனக்காவலர்களோடு ஒரு புரிதலுக்கு வந்து, அனுமதி பெற்றனர். அது ஒன்றே அவர்களது வாழ்வாதாரத்துக்கான வழி.

'பட் முன்ஷி' எனப்படுகிற உரிமம் பெற்ற உள்ளூர்க் கொள்முதலாளர்கள் குஜராத் வனத்துறையால் இதுவரை அணுகப்பட்டதுமில்லை, உள்ளூரில் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு அவர்களுக்குப் பணமும் வழங்கப்பட்டதில்லை. முதல் சில நாள்களிலேயே காடுபடுபொருள் கொள்முதலாளர் சிலர் பணமும், சிலர் மக்காச்சோளம், சர்க்கரை போன்றவற்றின் பண்டமாற்றும் விரும்பினார்கள் என்பதை மண்டலி அறிந்துகொண்டது. ஏனெனில் உள்ளூரில் அப்பொருகள்கள் கிடைப்பது அரிதாகவும் விலை அதிகமாகவும் இருந்தது. எனவே மண்டலி மக்காச்சோளத்தையும் சர்க்கரையையும் அதிக அளவில் அருகிலுள்ள வட்டத்தலைமையிடத்திலிருந்து வாங்க முடிவுசெய்தனர். சர்க்கரை கிலோ

ரூ.40க்கும், மக்காச்சோளம் கிலோ ரூ.22க்கும் சந்தையிலிருந்து வாங்கி, மக்களுக்கு அவர்களது தேவைக்கேற்றவாறு பணமாகவோ பண்டமாகவோ தந்தனர்.

ரஸ்கமின் செயற்குழு அங்கிருந்த அழுத்தத்தை உணர்ந்தனர். ஆனால் தங்களது வருமானத்தைக் கொண்டு இலுப்பைப் பூ வாங்கத் தயங்கினர். உள்ளூர் வணிகர்களின் தலையீட்டை அஞ்சினர். கூட்டங்கள் மூலமும் உரையாடல்கள் மூலமும், கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தி, தராசுகள் வாங்க முடிவுசெய்து, பெண்கள் குழுவை ஏற்படுத்தி, வங்கியிலிருந்து பணம் எடுக்கத்தொடங்கினர். வங்கியில் மிகுந்த கூட்டமாக இருந்ததால், பணம் எடுப்பததுதான் கடினமான காரியமாக இருந்தது; எப்படியோ சமாளித்து எடுத்தனர்.

விளைவுகளும் படிப்பினைகளும்

உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயலாளர் 26 வயதான இளம் பழங்குடிப் பெண். அவர் இச்செயல்பாட்டின்மூலம் நிறையக் கற்றுக்கொண்டார். வட்ட அலுவலர்களிடமிருந்து பயண அனுமதிச்சீட்டு பெற்றார். 30 கி.மீ. தொலைவிலிருந்த வங்கியிடம் பேசி அங்கிருந்து தினமும் பணம் எடுக்க ஏற்பாடு செய்தார். சர்க்கரையையும் மக்காச்சோளத்தையும் கொள்முதல் நிலையங்களுக்கு எடுத்துச்செல்ல வண்டிகள் ஏற்பாடு செய்தார். விளைபொருளை அதிகநாள் சேமிக்கும் அனுபவம் அவர்களுக்கு இல்லாததால் அந்த ஆபத்தைத் தவிர்த்து வணிகர்களோடு பேரம்பேசி சிறந்த விலைகளைப் பெற்றார்.

அடுத்த நான்கு வாரங்களில் மண்டலி 16.66 டன் இலுப்பை மலர்களை ரூ. 6,86,000/-க்குப் பெற்று தகோதில் உள்ள 14 கிராமங்களைச் சேர்ந்த 225 காடுபடுபொருள் சேகரிப்பாளர்களுக்கு ஆதரவளித்தனர். ஒவ்வொரு சேகர்ப்பரும்/உழத்தியும் அம்மாதத்தில் தலா ரூ.3048 பெற்றனர். கோவிட் காலத்தில், இலுப்பை சேகரிப்போரிடம் பணப்புழக்கம் இல்லை என்பதை மண்டலி உணர்ந்தது. நியாயவிலைக் கடைகளிலிருந்து கடும் போராட்டத்துக்குப் பிறகு உணவுத்தானியங்களை வாங்கினாலும், பிரதமர் திட்டத்தின்படி அங்கு கிடைக்காத பருப்பு, காய்கறி, எண்ணெய், மசாலாக்கள் ஆகியவை அவர்களுக்குத் தேவையாக இருந்தன. இதனால் நேர்ந்த கூடுதல் செலவுகளை மண்டலி ஏற்றுக்கொள்ள முடிவுசெய்தது.

மண்டலிக்கு இம்முயற்சி மிகுந்த தன்னம்பிக்கையை வழங்கியிருக்கிறது. அடுத்த ஆண்டு அறுவடைப்பருவத்தின் ஆரம்பத்திலேயே பெரிய அளவில் இடையீடு செய்து காடுபடுபொருள் சேகரிப்போருக்கு வனத்துறை நிறுவனம் தரும் குறைந்தபட்ச ஆதார விலைக்கும் மேலான நியாய விலையைப் பெற்றுத்தருவதற்கான திட்டமிடுகின்றனர்.

4. உள்ளூர் உற்பத்தி, சந்தைப்படுத்துதலும் அதன் வலிமையும் : ஶ்ரீலட்சுமி பெண்கள் கூட்டமைப்பு கேரளாவில் வழிகாட்டுகிறது

எழுதியவர்கள்: உஷா எஸ், அருண் ஆர்.எஸ்.

ஒளிப்பட உதவி தணல்

சமூகக்குழு வீட்டுத் தோட்டங்களுக்கு மக்குரம் தயாரிக்கப்படுகிறது

தணல் என்பது 1986ல் இயற்கை ஆர்வலர்கள் சிலரால் தொடங்கப்பட்ட தன்னார்வ ஆய்வு மற்றும் செயல்பாட்டுக் குழு. அப்போது முதலே, உயிர்ப்பன்மயம், சுற்றுச்சூழல்சார் கல்வியில் ஆராய்ச்சி செய்தும், பல மட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்திப் பயிற்சியளித்தும் வருகின்றனர். கடந்த இருபது ஆண்டுகளில், அவர்களது கவனம் இயற்கை வேளாண்மை, வேளாண் சூழலியல், உணவு இறையாண்மை, பூச்சியக் கழிவு, வேதிப்பொருள் பாதுகாப்பு, பருவச்சூழல் மாற்றம் ஆகியவற்றின் மீது குவிந்துள்ளது. தணல் அடிமட்டத்தில் உழவர்கள், சமூக நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், ஊராட்சிகள், மாணவர்கள் போன்றோருடன் இந்த விசயங்கள் குறித்து அறிவுறுத்தல், பயிற்சியளித்தல், அதிகாரப்படுத்தல் என்றும், கொள்கை சார்ந்து மாநில அரசுடனும் பணியாற்றிக்கொண்டுள்ளது. இயற்கை வேளாண்பொருள்களை 2003ம் ஆண்டு முதலே உழவர்களையும் நுகர்வோரை பொதுத்தளத்தில் ஒருங்கிணைத்துச் சந்தைப்படுத்திக்கொண்டிருக்கும் நிறுவனம் தணல். ஆஷா கிசான் சுவராஜ், பூச்சியக் கழிவு போன்ற குழுக்களுடன் தேசிய அளவிலும், இமயப்பகுதி மாநிலங்களிலும், உலகளவிலும் வேதிப்பொருள் பாதுகாப்புக் கொள்கைகள் சார்ந்து தணல் பணியாற்றுகிறது. கடந்து இரண்டு தசப்தங்களாக, ஐநா சபை மாநாடுகளில் நோக்கராகவும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

வெள்ளர் என்பது கேரளாவின் பிரபல சுற்றுலாத்தலமான கோவளம் அருகே உள்ள சிறிய கடலோறக் கிராமம். இது மலைகள் சூழ்ந்த ஒரு சிறிய, அழகான இடம். அடர்த்தியான மக்கள்தொகையும் சிறிய நிலப்பரப்புகளையும் கொண்ட இடம். பல தசாப்தங்களாகவே இங்கு வேளாண்மை முக்கியமான வாழ்வாதாரப் பணியாக இல்லை. ஆனால் துடிப்பான அதிகாரப்பரவலாக்கம், பெண்கள் சுயவுதவிக் குழுக்களின் உருவாக்கம், உணவுப்பாதுக்காப்பு சார்ந்த விழிப்புணர்வு, காந்தி ஸ்மாரக் நிதி, தணல், வெங்கனூர் கிராம ஊராட்சி போன்ற அமைப்புகள் இயற்கை வேளாண்மை குறித்து அளித்த பயிற்சிகள் ஆகியவை இங்குள்ள மக்களிடம் பெரிய மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. காய்கறிகள், பப்பாளி, வாழை,

ஒளிப்பட உதவி தணல்

கூட்டமைப்பிலிருந்து விதைகளைப் பெறுகிறார் ஓர் உழத்தி

சேனைக்கிழங்கு போன்றவற்றை பெருவாரியான சிறு நிலவுடைமையாளர்கள் பயிரிடத் தொடங்கினர். தணலிடம் பயிற்சிபெற்ற 70 உழவர்கள் கடந்த இரண்டாண்டுகளில் மிகவும் ஆர்வமாகி, தங்களுடைய நுகர்வுக்கும் பின்னர் சந்தைக்கும் இயற்கைமுறையில் காய்கறிகளை விளைவிக்கத் தொடங்கினர். அவர்களில் பலர் பெண்கள். முதலில் அவர்கள் குடும்ப உழைப்பைக்கொண்டு வேளாண்மை செய்தனர். பின்னர் குழுக்களை அமைத்துக்கொண்டனர்.

ஸ்ரீலட்சுமி கூட்டமைப்பு 2018ம் ஆண்டு 15 உழத்திகளை உறுப்பினர்களாகக் கொண்டு தொடங்கப்பட்டது (பெரும்பாலும் 35-70 வயதினர்). அவர்கள் அங்ககக் காய்கறிகளை உற்பத்தி செய்தும் விற்பனை செய்தும் வருகின்றனர். 3.5 ஏக்கர் இடத்தில் பயிரிடுகின்றனர். விதைகளிலும் அங்கக உள்ளீடுகளிலும் அவர்கள் தற்சார்படைந்துவிட்டனர். பொதுமுடக்கத்தின்போது அவர்கள் பல பிரச்சனைகளைச் சந்தித்தனர். சந்தைப்படுத்துதல் பெரிய சவாலானது. வெளியில் பணிக்குச்செல்ல முடியாததால் குடும்பங்கள் வருமான இழப்பைச் சந்தித்தனர். இங்குள்ள பெரும்பாலான மக்கள் தினக்கூலி ஊழியர்கள். கோவளம் சுற்றுலாத்தலத்தைச் சுற்றியுள்ள உணவுவிடுதிகளிலும், கடைகளிலும், பிற நிறுவனங்களிலும் பணியாற்றுபவர்கள். பெருந்தொற்றால் இந்நிறுவனங்கள் பெரும்பாலானவை மூடப்பட்டன. உணவும் பிற அத்தியாவசியப் பொருள்களும் கொடுத்த அரசாங்கம் உடனடி நிவாரணம் வழங்கியது. ஆனால் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக உடைந்து போயின. பெருந்தொற்றின்போது லட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உணவும் தங்குமிடமும் தந்து அரசாங்கம் விரைவாக உதவியது.

உள்ளூர் குழுக்கள், வர்த்தக நிறுவனங்கள், குடும்பங்கள், குடும்பஸ்ரீ குழுக்கள் ஆகியவற்றின் ஆதரவோடு ஊராட்சிகள் சமூகச் சமையலறைகளை அமைத்தனர். இது தங்களது விளைபொருள்களை விற்பதற்குத் தடுமாறிக் கொண்டிருந்த உழவர்கள் தங்கள் விளைபொருளைப் பகிர்ந்துகொள்ள உதவியது. இந்த சமூகச் சமையலறைகள் தனியாக வசித்துவந்த முதியவர்கள், நோயுற்றவர்கள், உணவுவிடுதிகளை நம்பியிருந்தவர்கள் ஆகியோருக்கும் பேருதவியாக இருந்தன.

பொதுமுடக்கத்தின்போது போக்குவரத்து வசதிகள் இயங்காததால், விரைவில் அழுகிவிடக் கூடிய காய்கறிகளை சந்தைக்கு எடுத்துச்சென்று விற்கமுடியாமல் உழத்திகள் சிரமப்பட்டனர். ஸ்ரீலட்சுமி குழுவின் உறுப்பினர் சிலர் தங்களது அண்டை வீட்டாருக்குக் காய்கறித் தேவையிருந்ததை அறிந்து, அவர்களைத் தொலைப்பேசி மூலமும், தங்களது வார்டு உறுப்பினர்கள் மூலமும் தொடர்புகொண்டு அடையாளம் கண்டனர். முதலில் 25 வீடுகளுக்குக் காய்கறிகள் வழங்கத்தொடங்கினர். இச்செயல்முறை மூலம், இப்பெண்கள் குழு 25 குடும்பங்களைச் சார்ந்த 90 பேருக்கு, குழந்தைகள் உட்பட, பல்வேறு வகைக் காய்கறிகளைத் தங்களது விவசாய நிலங்களிலிருந்தே

வழங்கமுடிந்தது. இது அவர்களுக்குத் தங்கள் வாழ்வின் நிறைவான தருணங்களாகின. நல்ல வெயிலும் மழையும் கிடைத்ததால் உற்பத்தியும் அதிகமானது. மேலும் தங்களது விவசாய நிலங்களைப் பார்த்துக்கொள்ள மக்களுக்கு நேரம் கிடைத்தது. திருவனந்தபுரத்தில் தணல் தொடங்கிய ஆர்கானிக் பஜார் என்ற இயற்கை உணவங்காடி (www.organic-bazaar.in) எல்லா இயற்கை உழவர்களையும் தொலைப்பேசியில் அழைத்து அவர்களது சிக்கல்களைக் கேட்டறிந்தது. அவர்களது பண்ணைகளிலிருந்து காய்கறிகளைக் கொள்முதல் செய்துகொள்ள முன்வந்தனர். இது பெண்கள் கூட்டமைப்புக்குப் பேருதவியாக அமைந்தது. இது உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் பலருக்கு உந்துதலாக அமைந்து, ஸ்ரீலட்சுமி பெண்கள் கூட்டமைப்பிலிருந்து விதைகள் வாங்கி காய்கறி சாகுபடி செய்யத் தொடங்கினர். இப்பெண்கள் வல்லுனர் குழுவாகி பிற புதிய உறுப்பினர்களுக்கும் காய்கறி சாகுபடியில் உதவத்தொடங்கினர்.

பெருந்தொற்று மாநிலத்தில் உணவு உற்பத்தியின் அளவு குறித்த விவாதங்களையும் ஏற்படுத்தியது. அரசாங்கம் காய்களிகள், கிழங்குகள், பழங்கள் ஆகியவற்றின் உற்பத்தியைக் கேரள மாநிலத்தில் அதிகரிக்க முடிவுசெய்தது. ஸ்ரீலட்சு கூட்டமைப்பின் உறுப்பினர் குடும்பஸ்ரீ திட்டத்திலிருந்தும் உதவி பெற்றனர். அவர்கள் கற்ற இரண்டு பாடங்கள்: உள்ளூரிலேயே உள்ளூர் மக்களைத் திரட்டி உணவு உற்பத்தி செய்யவேண்டும்; விளைபொருள்களை விற்கத் திட்டமிடவும் சந்தைப்படுத்தவும் உள்ளூர் அமைப்புகளை உருவாக்கவும் தேவை உள்ளது.

ஒளிப்பட உதவி தணல்

சந்திரிகா அம்மா, தனது வீட்டுத்தோட்டத்தில்

5. பெருந்தொற்றின்போது கொர்ச்சி மகாகிராமசபையின் முன்னெடுப்பு

குமாரிபாய் ஜம்கதன், கொர்ச்சி வட்டம், கட்சிரோலி மாவட்டம்

ஒளிப்படம் - ஒமித்தா பவங்கர்

கார்காலத்தில் வீட்டுத்தோட்டங்கள், இயற்கை வேளாண்மை, ஊடுபயிர்கள், அரசாங்க விலைகள், உள்ளூர் விதைகள், பயிர்செய்தல் போன்ற வேளாண்தலைப்புகளில் விளக்கப்படங்கள் வைக்கப்பட்டு, பெண் தலைவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன

‘ஆம்ஹி அம்சியா ஆரோக்யசாத்தி’ குறித்து

ஆம்ஹி அம்சியா ஆரோக்யசாத்தி (ஆஅஆ) 1984ம் ஆண்டு தொடங்கப்பட்ட தொண்டு நிறுவனம். 1970களில் ஜெயப்பிரக்காஷ் நாராயணால் தொடங்கப்பட்ட சம்பூரண புரட்சி இயக்கத்தில் அதன் வேர்கள் உள்ளன. இதனைத் தொடங்கியவர்கள் ஜெ.பி.யின் கருத்தியலால் கவரப்பட்டவர்கள். சமூகத்தின் தற்சார்புக்கும் அதிகாரமாக்கலுக்குமான கட்டமைப்பை வளர்ப்பதில் உள்ள பங்குக்காக இந்நிறுவனம் பெயர்பெற்றது. எந்த விதமான சர்வதேச இசங்களுக்கும் கட்டுப்படாமல் சமூகக்குழுக்களுக்கு சமூக மாற்றம் நோக்கி நகர உதவுகின்றனர். இதன் நிறுவனர்கள் ஒரு சுய உதவி இயக்கத்தைத் தோற்றுவித்ததன் மூலம், அவரரவர் தீர்வுகளை அவரரவரே கண்டடைவதற்கான உதவியை வழங்குகின்றனர். தங்களது தீர்வுகளைத் திணிப்பதில்லை. கிராந்தியோதி மகிளா சங்காதனா, ஜன்கல்யான் அபங்க்ஜான் சங்காதனா, மகாகிராமசபா (கட்சிரோலி மாவட்டத்தின் கொர்ச்சி வட்டத்திலுள்ள வட்ட அளவிலான அமைப்பு) ஆகிய சுயவுதவிக் குழுகளைச் சமூகக்குழுசார் நிறுவனங்களைப் போல ஆஅஆ அமைத்துள்ளது. மகாகிராமசபா பதிவுசெய்யப்படாத தன்னாட்சி நிறுவனம். இது சட்டரீதியான கிராம சபைகளின் முறைசாரா கூட்டமைப்பு. கொர்ச்சி வட்டத்தில் 80 கிராமசபைகள் இதில் உறுப்பினர்களாக உள்ளன. ஆளுகையின் எல்லாத் தளங்களிலும் கிராமசபைகளை ஜனநாயகப்படுத்தும் எண்ணத்துடன் இது எழுப்பப்பட்டுள்ளது. கொர்ச்சி மகாசபை பல மக்கள் பிரச்சனைகளைக் கையில் எடுத்துள்ளது - வன உரிமைச் சட்டத்தைச் செயல்படுத்துவது; அரசாங்கத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துவதற்கு எதிரான போராட்டம் (மாநிலங்களுக்கிடையிலான மின்கம்பி இணைப்பு, இரும்பு அகழ்வதற்காக மக்கள் வெளியேற்றப்படுவது); டெண்டு இலைகளின் ஏலம் போன்றவை. கட்சிரோலியின் எட்டப்பள்ளி வட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவினர். ஆஅஆவின்

ஒளிப்படம் - ஒமித்தா பவங்கர்

குமாரிபாய் பெண்கள் கூட்டமைப்பில் பேசுகிறார்

முக்கியப் பணி இத்தகைய அமைப்புகளை மாவட்டம் முழுவதும் ஆதரித்து வளர்த்துவது.

பெருந்தொற்றின் போது உணவும் பிற அத்தியாவசியப் பொருள்களும் ஏழை மக்களுக்கு வழங்குவதற்கு இந்த கிராமசபைகள் முன்வந்தன.

கிராமசபையின் முயற்சிகள்

கோவிட்-19 உலகம் முழுவதும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி மக்கள் வருமானம் ஈட்டுவதைக் கடனமாக்கியுள்ளது. இடைப்பட்ட காலத்தில், மக்களுக்கு வேலை உறுதியில்லை, காடுபடுபொருள்களைச் சேகரிக்கும் வாய்ப்பில்லை, அவற்றை வெளிப்படையாக விற்கவும் வழியில்லை. இத்தகைய சூழலில் கட்சிரோலியின் கொர்ச்சி தாலுக்காவைச் சேர்ந்த சில கிராமசபைகளின் தலைவர்கள் ஒன்றுகூடி கோவிட்-19 பொதுமுடக்கம் மக்களின் வாழ்க்கையைக் கடினமாக்கிவிட்டது என்றெண்ணினர். கிராமசபை நிதிகளின் மூலமாக அத்தியாவசியப் பொருள்களை வழங்க முடிவுசெய்தனர். வீட்டுக்கு வீடு சென்று மக்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டுப் பொருள்களின் பட்டியலொன்றத் தயாரித்தனர். கிராமசபையில் ஒரு அதிகாரப்பூர்வத் தீர்மானம் நிறைவேற்றுவதை உறுதிசெய்து, கிராமத்தில் சிறு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். தனித்த பெண்கள், உடல்திறன் குறைபாடுள்ளவர்கள் போன்ற பாதிப்புக்குள்ளாகக்கூடிய குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. கொர்ச்சி தாலுக்காவிலுள்ள ககனெகட்டா, சால்கே, ஜாங்கர் கோண்டி, குக்டெல் கிராமங்களின் கிராமசபைகள் பங்கீட்டுப் பொட்டலங்களை வழங்கினர். முகக்கவசம் அணிவது, சானிடைசர் பயன்படுத்துவது, சமூக இடைவெளி காப்பது போன்ற பாதுக்காப்பு முன்னெச்சரிக்கைகளைக் கடைப்பிடித்தனர்.

பங்கீட்டுப் பொட்டலங்களில் அரிசி, பருப்பு, வறமிளகாய், உப்பு, எண்ணெய், உருளைக்கிழங்கு, வெங்காயம், சோப்பு, சர்க்கரை, தேயிலை போன்ற இன்றியமையாப் பொருள்கள் சேர்க்கப்பட்டிருந்தன. மக்காம், பல்வேறு சங்காத்தன்கள், ஆஅஆ ஆகிய அமைப்புகள் தனித்த பெண்களுக்கு அத்தியாவசிப் பொருள்களையும், வேளாண்மைக்கு விதைகளையும், இயற்கை உரத்தையும், வீட்டுத்தோட்டத்துக்கான விதைகளையும் வழங்கினர். தனித்த பெண்களுக்கும் உடல்திறன் குறைபாடுடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

மின்னிணைப்புக் கம்பங்கள் நிறுவப்படுவதற்கு தரப்பட்ட இழப்பீட்டுத் தொகையைப் பயன்படுத்தி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், திறந்தவெளிகளில் மரம்நடவும் குக்டலே கிராமசபை திட்டமிட்டது. 110 குடும்பங்களைச் சேர்ந்த 110 நபர்கள் ஆளுக்கு 50 குழிகள் வீதம் 5500 குழிகளைத் தோண்டினர். இக்குடும்பங்களுக்கு ஒரு நாளைக்குத் தலா ரூ.250 ஊதியம் வழங்கப்பட்டு பணி நிறைவடைந்தது.

மையப்படுத்தப்பட்ட முடிவுவெடுத்தலின் தடைகள்

இத்தகைய நற்பணியை மகாகிராமசபைகள் செய்துகொண்டிருந்தபோது, மாவட்ட ஆட்சியர் கிராமசபைக் கணக்குகளை முடக்கினார். கிராமசபைகளின் நிவாரணப்பணியில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் இந்த நடவடிக்கையால் மக்கள் துன்பப்பட நேர்ந்தது.

அச்சமயத்தில், வழிகாட்டும் அமைப்புகளான ஆஅஆவும் கொர்ச்சித் தாலுக்கா மகாகிராமசபையும் கிராமசபைகளின் பதிவேடுகளில் திருத்தங்கள் செய்து, தேவைப்படும் அறிக்கைகளைத் தயாரிக்க அரசாங்கத்து உதவினர். ஆனால் மாவட்ட ஆட்சியர் இந்த கணக்குகளை அங்கீகரிக்க மறுத்தார். கிராம சேவகரோ, கிராமச் செயலாளரோதான் வன உரிமைச் சட்டம் அல்லது PESA சட்டங்களின்படி வன உரிமைகள் குழு அல்லது வன உரிமை மேற்பார்வைக் குழுவின் கணக்குகளில் கையெழுத்திட முடியும் என்பதையும் அவர் அங்கீகரிக்கவில்லை. கிராமசபைக் கணக்கில் உள்ள தொகை கோஷ் சமித்திக் கணக்குக்கு மாற்றப்படும் என்ற அச்சுறுத்தலால் இச்செயல்முறை நிறுத்தப்பட்டது. கொர்ச்சி, குர்க்கேதா தாலுக்காக்களின் 19 கிராமசபைகள் ஒன்றுசேர்ந்து நீதிமன்றத்தில் தங்களது செலவிலேயே வழக்கு தொடர்ந்தபோதுதான், அவர்களது கணக்குத் தற்காலிகமாக இயங்க அனுமதிப்பட்டது. வேலைக்கான கூலியும், டெண்டு இலைகள், பிற சிறுகாடுபடு பொருள்கள் விற்பனையின் பங்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் வழக்கு நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளது. இழப்பீட்டுத் தொகைப் பயன்பாடு இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

மாவட்ட நிர்வாகத்தின் சினத்துக்கு ஆளானபோதும், இச்செயல்பாடுகள் மூலம் மகாகிராமசபை மேலும் வலுவடைந்துள்ளது.

6. கோவிட் நெருக்கடியின் போது இயற்கை வேளாண்மை நோக்கிய நகர்வு

HDRC - ஒரு நிலை ஆய்வு

எழுதியவர்கள்: ராஜேஷ் லக்கும், சுனிதா மெண்டோசா

ஒளிப்படம் - கமலாபென் எஸ். சமீர்

களப்பணி நாள் - கரும்பயிர் ‘தொலாரியா சுண்டல்’ ஜெயாபென் பி. தமோர் கிராமம்: நவகாரா, வட்டம்: மேக்ராஜ், மாவட்டம்: ஆரவல்லி

மனிதவள ஆய்வு மையம் (HDRC - ம.வ.ஆ.மை) என்ற நிறுவனம் குஜராத்தில் 50 ஆண்டுகளாக தலித் உரிமைகள், பெண்களுக்கான அதிகாரம், குழந்தை உரிமைகள், நிலவுரிமைகள், பழங்குடியினரின் வன உரிமைகள், வளங்குன்றா வீடுகள், சுகாதாரம், கல்வி, அடிநிலை மக்களின் வாழ்வாதாரம் போன்ற பல துறைகளில் பணியாற்றி வந்துள்ளது. உரிமைகள் சார்ந்த அணுகுமுறை மூலமாக இக்குறுங்குழுக்கள் சமூகத்திலிருந்து விலக்கப்படுதலை நீக்கும் நோக்குடன் செயல்படுகிறது. அதாவது, விளிம்புநிலைச் சமூகக்குழுக்கள் அரசியலமைப்பிலும் சட்டத்திலும் அவர்களிக்கிருக்கும் உரிமைகளை அறிந்து அவற்றைக் கோரவும், இந்த உரிமைகளை மதிக்கவும், காக்கவும் வேண்டிய நபர்கள்/நிறுவனங்களின் திறனையும் பொறுப்பையும் அதிகரிக்கவும் பணியாற்றுகின்றனர். ம.வ.ஆ.மை. சமூகக்குழுசார் நிறுவனங்களை நேரடி இடையீட்டு நிகழ்வுகள் மூலமாக வலுப்படுத்த விழைகின்றது. அதன்மூலம் அத்தகைய நபர்களும் நிறுவனங்களும் இந்த முன்னெடுப்புகளின் இறுதி விளைவுகளுக்கான உரிமைகளை ஏற்று, நிர்வகிப்பர். தற்சமயம் ம.வ.ஆ.மை. குஜராத்தின் கிராமப் பகுதிகளிலும், நகர்ப்புறங்களிலும் 11 மாவட்டங்களிலுள்ள 27 தாலுக்காக்களிலுள்ள அடிநிலை சமூகக்குழுக்களோடு அயராது பணியாற்றிக்கொண்டுள்ளது.

2020 மார்ச் 24ம் நாள், இந்திய அரசாங்கம் கோவிட் பெருந்தொற்றைத் தடுக்க நாடுதழவிய பொதுமுடக்கத்தை மூன்று வாரங்களுக்கு அறிவித்தது. திடீரென்று அவசரமாகத் திட்டமிடப்பட்டு முழுப் பொதுமுடக்கம் பல லட்சம் அடிநிலை மக்களை உணவுக்கும் பிற அடிப்படைத் தேவைகளுக்கும் வாழ்வாதாரத்துக்கும் வழியின்றி விட்டது. பலருக்கும், குறிப்பாக, எளிதில் பாதிக்கப்படக்கூடிய விளிம்புநிலைச் சமூகக்குழுக்களுக்கு பெரும் அவதிகளை ஏற்படுத்தியது. திடீர்ப் பொதுமுடக்கத்தால் லட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள், தினக்கூலி ஊழியர்கள், சிறு வணிகர்கள், கணவனையிழந்த ஏழைப்பெண்கள், வயதானவர்கள் ஆகியோர்

மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டனர். பிறகு வந்த பொதுமுடக்கங்களும், நோய்த்தொற்றும் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் மீது பெருந்தொற்றின் நீண்டகால பாதிப்புகள் குறித்த அச்சங்களை அதிகரித்தன. இவர்களே இயற்கைப் பேரழிவுகளாலும் மனிதனால் உருவான பேரழிவுகளாலும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

மேற்கண்ட சமூகக்குழுக்கள் தவிர, உழவர்களும் பொதுமுடக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உழவர்கள் தங்களது நிலங்களுக்குச் செல்லமுடியாததால் அவர்களது விளைச்சல் குறைந்துள்ளது; சில இடங்களில், சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை அவர்களால் பார்த்துக்கொள்ளவே முடியவில்லை. அதிலும் குறிப்பாக, உழத்திகளின் நிலை மிகவும் மோசமானது. ம.வ.ஆ.மை. இந்த நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து, உடனடி உதவிகளை வழங்கியது. உழத்திகள் குழுக்களின் தற்போதைய நிலைமையும் கணக்கில் கொள்ளப்பட்டது. நம்பகமான இடங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இப்பருவம் முற்றிலும் வீணாகிவிட்டது என்றும், உழத்திகள் தங்களது தினப்படி உணவுக்குப் பணம் ஈட்டவே திண்டாடுகின்றனர் என்றும் அறியப்பட்டது.

மேற்படி சூழலைப் புரிந்துகொண்டு, அராவலி மாவட்டத்தின் மேகராஜ் தாலுக்காவிலுள்ள 10 கிராமங்களிலுள்ள உழத்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உடனடி நிவாரணமாக, பங்கீட்டுப் பொட்டலங்கள் இப்பெண்களுக்கு வழங்கப்பட்டன. மொத்தம் 280 பொட்டலங்கள் வழங்கப்பட்டன. ஒரு பொட்டலம் ஒரு குடும்பத்துக்கு 15 நாட்களுக்குத் தேவையான உணவுக்குப் போதுமானதாக இருந்தது. பொதுமுடக்கத்தால் இப்பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரவும் இயலவில்லை, தங்கள் வாழ்க்கையை ஓட்டப் பணமுமம் இல்லை. ம.வ.ஆ.மை. வழங்கிய உணவுப் பொட்டலங்கள் இப்பெண்களின் தினசரி வாழ்க்கையைச் சமாளிக்க இப்பேரின்னல் காலத்தில் பேருதவியாக இருந்தன.

இந்த இடையீட்டின்போது, உழத்திகள் விதைகளும், இயற்கைப் பூச்சிக்கொல்லிகளும் தேவையென்று கோரியிருந்தனர். ம.வ.ஆ.மை.மும் WGWLOவும் இணைந்து அவர்களுக்கு இந்நிலையில் உதவ முடிவுசெய்தன. 300 உழத்திகள் இதன் பயன்பெற்றனர். தரமான விதைகளும் இயற்கை உரங்களும் 300 உழத்திகளுக்கு வழங்கி, பொதுமுடக்கத்தால் ஏற்பட்ட இத்தகைய பாதிப்புகளுக்குப் பின்னும் அவர்கள் தற்சார்பாக இருக்க வழிவகுத்தனர். மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயிர், துவரப்பருப்பு போன்ற

ஒளிப்படம் - கமலாபென் எஸ். சமீர்

• (இடது) கோதுமை 'துக்டி கேகு' பாவ்னாபென் எஸ். வர்சாட் கிராமம்: பகாடியா, வட்டம்: மேக்ராஜ், மாவட்டம்: ஆரவல்லி, குஜராத்; (நடுஇடது) கோதுமை 'துக்டி கேகு' சுமித்ராபென் எஸ். காண்ட், கிராமம்: வலுனா, வட்டம்: மேக்ராஜ், மாவட்டம்: ஆரவல்லி, குஜராத்; (நடுவலது) நாட்டுக் கடுகு விதைகள் மஞ்சுலாபென் ஆர். காண்ட், கிராமம்: வலுனா, வட்டம்: மேக்ராஜ், மாவட்டம்: ஆரவல்லி, குஜராத்; (வலது) கரும்பயிர் 'தொலாரியா சுண்டல்' பானுபென் எம். காண்ட், கிராமம்: வலுனா, வட்டம்: மேக்ராஜ், மாவட்டம்: ஆரவல்லி, குஜராத்

பயிர்களுக்கான விதைகள் வேளாண்மைக்கும், வெண்டை, சுரக்காய், வெள்ளரிக்காய் போன்ற விதைகள் வீட்டுத்தோட்டத்துக்கும் வழங்கப்பட்டன. 10 கிராமங்களிலுள்ள பழங்குடியினப் பெண்களுக்கு அவர்களது செலவினங்களைக் குறைக்கும்வகையில் இயற்கை உரமும் இயற்கைப் பூச்சிக்கொல்லிகளும் செய்வதற்கு வல்லுனர்களால் பயிற்சியளிக்கப்பட்டது.

ம.வ.ஆ.மை. வழங்கிய பொட்டலங்கள் குறித்த ஐயங்கள் நிறையப் பெண்களுக்கு இந்நிகழ்வின் தொடக்கத்தில் இருந்தன. அவற்றுக்கான தேவையிருந்தபோது, அவற்றில் கோவிட் பாதிப்பு இருக்குமோ என்றஞ்சிப் பெண்கள் அவற்றை வாங்க மறுத்தனர். ஆனால் இப்பெண்களுக்கு இந்த அமைப்பின் நோக்கம் குறித்து விளக்கி, பொட்டலங்கள் தயாரிக்கும்போதும் வழங்கும்போதும் கிருமிநீக்கச் செயல்முறை எப்படிக் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை அவர்களது கிராமத் தலைவர்கள் மூலமாக அறிவுறுத்தினர்.

15 நாட்களுக்கு நீடிக்கக்கூடிய பொட்டலங்களை, தங்களது வாழ்வின் மிகச் சோதனையான காலத்தைக் கடத்த இப்பெண்கள் பயன்படுத்தினர். அவர்கள் பிழைத்திருக்க இது ஒன்றே வழியென்றானதால், பல இடங்களில், இப்பொட்டலங்களை ஒரு மாதத்துக்குப் பயன்படுத்தினர். விதைகள் அவர்களது அடுத்த பருவத்தைக் காத்தன!

ஒளிப்படம் - கமலாபென் எஸ். சமீர்

(இடது) எஸ்.ஐ.ஆர். முறை கோதுமை 'துக்டி கேகு'; (நடுவில்) பலவகைக் கத்திரிக்காய், மிளகாய் - சேஜல்பென் எம்.காண்ட் வீட்டுத்தோட்டம்; (வலது) சிகப்பு மக்காச்சோள விதை மேக்ராஜ் விதைவங்கியிலிருந்து வழங்கப்படுகிறது, கிராமம்: பகாடியா

7. உணவும் வேளாண்மையும் சார்ந்து நெகிழ்வுறுதியைக் கட்டமைத்தல் - கோவிட்-19க்கு எதிர்வினையாக உழத்திகளின் முன்னெடுப்பு

எழுதியவர்கள்: WGWLO

ஒளிப்பட உதவி - WGWLO

மகிளா கிஸான் சகி, பரப்புரையின்போது உழத்திகளோடு உணவுப்பாதுகாப்பு குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொள்கிறார் காஜல் - சமர்த்தன் மகிளா விகாஸ் சங்காத்தன், கோகா, பாவ்நகர்

பெண்கள் நில உடைமைக்கான பணிக்குழு (WGWLO - பெ.நி.உ.ப.) குஜராத்தில் பெண்கள் நிலத்தைப் பயன்படுத்தவும் உடைமை உரிமைக்கும் 2002ம் ஆண்டிலிருந்து பணியாற்றிக்கொண்டிருக்கும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகக்குழுசார் அமைப்புகளின் பதிவுசெய்யப்படாத, ஆனால் முறையான பிணையம். கடந்த 18 ஆண்டுகளில் இப்பிணையம் பெண்களின் நிலவுரிமைகளையும் உழத்திகளாக அவர்களது அடையாளத்தையும், செழிப்பான வளங்களுக்கும் பிற உரிமைகளையும் முன்வைத்துப் பணியாற்றியுள்ளது. பெ.நி.உ.ப. பல உத்திகளையும் மாதிரிகளையும் முன்வைத்துள்ளது. சமூகக்குழு சார்ந்த சட்டத்துறைப் பணியாளர்கள், சுவா-பூமி கேந்திரா என்றழைக்கப்படும் வட்ட அளவிளான பயலகங்கள் ஆகியவை இவற்றில் அடக்கம். இவற்றின் படிப்பினைகளை ஒத்து நோக்குடைய பிற குடிமைச்சமூகப் பிணையங்களோடும் அரசாங்கத்தோடும் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. இவர்கள் குஜராத்தின் நடுப்பகுதி, வடமேற்கு, தென்பகுதிகளில் 15 வட்டங்களிலும் 11 மாவட்டங்களிலும் உள்ள 225 கிராமங்களில் பழங்குடி, நிலவுடைமைச்சமூக, ஆயர்குடி, பிற விளிம்புநிலை வேளாண் சமூகங்களைச் சேர்ந்த உழத்திகளோடு பணியாற்றுகின்றனர்.

கோவிட்-19 சூழலின்போதும் அதன் பிறகும், கிராமப் பொருளாதாரம், கிராம வாழ்வாதாரங்களும் பேரிடியைச் சந்தித்துள்ளன. மிக மெதுவாக மீண்டு வருகின்றன. செழிப்பான நிலம், வேளாண் இடுபொருள்கள், தொழில்நுட்பம், கடன், தகவல் ஆகியவற்றுக்குப் போதிய உரிமைகள் இல்லாத உழத்திகள், வேளாண் பருவங்கள் தங்கள் குடும்பத்தின் ஆதாரத் தேவைகளைச் சந்திப்பதற்குக் கூடுதல் அழுத்தத்தை அளித்தன.

பெ.நி.உ.ப. தனது உறுப்பினர்களிடம் உழத்திகள் சந்தித்த இடர்கள் குறித்துக்கேட்டபோது, ஏறத்தாழ 90% பேர் தங்களது குளிர்காலப் பயிர் அறுவடையை விற்க முடியவில்லை என்று அறிந்தனர். தென் குஜராத்தின் தாபி மாவட்டத்தில் காய்கறி சாகுபடி செய்த உழவர்கள், காய்கறிகளால்

ஒளிப்பட உதவி - WGWLO

மகிளா கிஸான் சகி கணக் உழத்திகளுக்குப் பனிக்கால வேளாண்மைக்கு விதைப் பொட்டலங்களை வழங்குகிறார் - சுவாதி, படாடி, சுரேந்திரநகர்

கொரோனா பரவுவதாக ஒரு வதந்தி உலவுவதால், மக்கள் காய்கறிச் செடிகளை அழித்துக்கொண்டிருப்பதாகக் கூறினர்! கார்காலத்தில் பயிரிட விதைகளைப் பெறவும், உணவுப்பொருள்கள் வாங்கவும் கடன்வாங்கியதால் அதே உழத்திகளின் கடன்சுமை அதிகரித்தது. சுரேந்திரநகரின் பட்டிடியைச் சேர்ந்த வசந்திபென் லய்ஜிபாய் எல்லா உழத்திகளின் சிக்கலையும் எதிரொலிக்கும் வண்ணம், புலம்பெயர்ந்திருந்த குடும்பத்தினரும் திரும்பியதால் விரைவில் தீர்ந்துபோன உணவுப்பொருள்களுக்கு வழியில்லாமல் அவர்கள் சேர்த்து வைத்திருந்த தானிய விதைகளைச் சமைத்து உண்டதாகக் கூறினார்.

வரும் வேளாண்பருவத்திலும் எதிர்கொள்ள வேண்டியிருந்த சவால்கள், பெ.நி.உ.ப.வையும் அதன் உறுப்பினர்களையும் உழத்திகளிடம் இடையீடுகள் செய்து, வளங்குன்றா வேளாண்மைச் செய்முறைகளுக்கும் இயற்கை வேளாண்மைக்கும் திரும்புமாறு முடிவெடுக்கவைக்க இயன்றது.

பெ.நி.உ.ப. மேற்கொண்ட இடையீடுகளால் உறுப்பினர்கள் பல மட்டங்களில் பல செயல்பாடுகளை ஒருங்கிணைத்தனர். பிணைய உறுப்பினர்கள் மத்தியில், குறிப்பாக உழத்திகள் மத்தியில், கார்கால வேளாண்மைப் பருவத்தில் சந்திக்கவிருந்த சிக்கல்களைப் பற்றிய ஒரு பொதுப் புரிதலில் இருந்து தொடங்கினர். இப்புரிதல் பெண்கள் அமைப்புகள் மூலமாக வட்ட அளவில் சமூகக்குழுச் சட்டப்பணியாளர்கள் மூலமும் மகிளா கிசான் சகிகள் அமைப்பு மூலமாகவும் உழத்திகளிடம் கொண்டு சேர்க்கப்பட்டது. வாட்சாப் மூலம் செறிவான வானொலி, காணொளிகளைப் பகிர்தல், மெய்நிகர் கூட்டங்கள் நடத்துதல், பலகைக்கணினி போன்ற எண்ணிம தகவல்தொடர்பு கருவிகளையும் முறைகளையும் பயன்படுத்தி உழத்திகளை கூட்டமைப்புத் தலைவர்களோடு தொடர்பிலிருக்கச் செய்தனர்.

பெ.நி.உ.ப. உறுப்பினர்களான உள்ளூர் பெண்கள் அமைப்புகளும் வட்ட அளவில் சமூகக்குழுசார் ஊழியர்களும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவத்தி உள்ளூர் உழத்திகளைச் சென்றடைவதில் முன்னணியில் இருந்துள்ளனர்.

மகிளா கிசான் சகிகள் வீட்டுத்தோட்டம், உள்ளூர் வளங்களைக் கொண்டு வேளாண்மை செய்வது, வேளாண்முறைகளை பன்மயப்படுத்துதல், நீண்டகால உணவுப்பாதுகாப்புக்கும் நிலவளங்களின் நன்மைக்கும் ஏற்ற பயிர்களை வளர்த்தல், ஒட்டு விதைகளுக்குப் பதிலாக உள்ளூர் நாட்டு விதைகளைப் பயன்படுத்துதல் ஆகியவை சார்ந்த தகவல்களோடு 15000க்கும் மேற்பட்ட உழத்திகளைச் சென்றடைந்தனர். தாங்கின் தொலைதூர கிராமமான ஆவ்வாவைச் சேர்ந்த மீராபென் பதியர் அவ்வாறு அவருக்கு வந்த ஒலிச்செய்திகள் மிகவும் புதுமையாக இருந்ததாகக் கூறினார், “இயற்கை உரங்கள் செய்வது பற்றிய பயனுள்ள தகவல்கள் எங்களை வந்தடைகின்றன. நான் வேறெங்கும் போகவேண்டியதில்லை.”

இன்னும் உறுதியான முறையில், கார்காலப் பயிர்களை விளைவிக்கத் தேவையான உள்ளீடுகள், விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் ஆகியவை வாங்குவதற்கு வசதியில்லை என்று பல உழத்திகளும் குரலெழுப்பியதற்கு எதிர்வினையாக, பெ.நி.உ.ப. பல கொடையாளர்களிடமிருந்தும் பிற சமூகக் கொடையாளிகளிடமிருந்தும் 4200 உழத்திகளுக்கான உதவியைத் திரட்டித்தர முடிந்தது. தனித்த உழத்திகள், வேளாண் பணி செய்யும் பெண்கள், வீடுதிரும்பிய புலம்பெயர் பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. முக்கிய உள்ளூர்ப் பயிர்களின் விதைகளும் பஞ்சாம்ருதம், ஜீவாம்ருதம், பஞ்சகாவ்யா போன்ற இயற்கை இடுபொருள்களும் உழத்திகளுக்கு வழங்கப்பட்டன.

2019ல் தொடங்கப்பட்ட விதைவங்கிகள் உள்ளூர் உழவர்களிடமிருந்து பெற்றும், பெ.நி.உ.ப. உறுப்பினரிடையே பரிமாற்றம் செய்துகொண்டும், பிற கூட்டாளிகளிடமிருந்து பெற்றும் சேமித்த நாட்டு விதைகள் 850 உழத்திகளுக்குக் கார்காலப் பயிர் சாகுபடிக்குப் பயன்பட்டன. மொத்தமாகப் பயன்பெற்ற 5000 உழத்திகள் அறுவடைக்குப் பிறகு ஒன்றரை மடங்கிலிருந்து இரண்டு மடங்கு அதிக விதைகளை விதைவங்கியில் சேர்ப்பார்கள். இதைப் பெண்கள் அமைப்புகளின் உறுப்பினர்கள் எதிர்காலப் பரிமாற்றத்துக்காக நிர்வாகம் செய்வர்.

சிறுகுறு உழத்திகளுக்கு இந்தப் பெருந்தோற்று விளைவித்த சமூக, பொருளாதார வாழ்வாதார, பிழைப்புச் சவால்களைச் சமாளிக்க நிவாரணப் பணிகள் குறுகிய காலத்துக்கே பயன்படமுடியும். கூட்டாக, நிவாரணத்தை மேற்கண்ட இடையீடுகளோடு சேர்த்து வழங்கியதன்மூலம், பெ.நி.உ.ப. உழத்திகளின் வாழ்வாதாரத்தை மீட்டுத்தர முயன்றது. அது அவர்கள் மீண்டெழ வகைசெய்தது.

ஒளிப்பட உதவி - WGWLO

மகிளா கிஸான் சகி தரியாபென் உழத்திகளுக்குப் பனிக்கால வேளாண்மைக்கு விதைப் பொட்டலங்களை வழங்குகிறார் - சார்த்தி, சாந்த்ராம்பூர், மகிசாகர்

8. 'தொழிலாளர்களாக எங்களுக்கு இப்போது ஓர் அடையாளம் உள்ளது' - நிர்மலாவின் கதை

எழுதியவர்கள்: சுவர்ணா தாம்லே, நிர்மலா காத்வடே

ஒளிப்பட உதவி - பிரக்கிருதி

பணியட்டை உடைய பெண்களுடன் நிர்மலா

பிரக்கிரிதி குறித்து

பிரக்கிரிதி மகாராட்டிரத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் 1990ம் ஆண்டுமுதல் கிராமப் பெண்களை அதிகாரப்படுத்துதலுக்காகப் பணியாற்றிவருகிறது (www.prakritiwomen.in). வேலைவாய்ப்பு உறுதி சார்ந்த பணி, இத்திட்டம் 2005-6ல் சில தேர்ந்தெடுத்த மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டபோது தொடங்கப்பட்டது. மத்தியப் பிரதேசத்திலுள்ள பாலகாட், மகாராட்டிரத்திலுள்ள பந்தரா ஆகிய மாவட்டங்களில் பிரக்கிரிதி கிராம ஊராட்சிகளுடன் இணைந்து விழிப்புணர்வை வளர்த்து, இத்திட்டத்தின் கீழ் செய்யக்கூடிய பணிகளை அடையாளம் காண உதவியது. கோவிட்-19 பொதுமுடக்கத்தின் முதல் கட்டத்தில் மக்காம் முன்னெடுத்த மாநில அளவிலான முயற்சிகளில் பிரிக்கிரிதி கலந்துகொண்டது. பணி அட்டைகள் (ம.க.தே.ஊ.வே.தி. - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துக்கு அவசியமான ஆவணம்) வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்தினர்.

இடையீட்டுக்கான தேவை

நிர்மலாவின் கிராமமான சவர்மெந்தா நாக்பூர் மாவட்டத்தில் உள்ள சிறிய கிராமம். இங்கு 150 குடும்பங்கள் உள்ளன. பெரும்பாலும் பருத்தி விளைவிக்கும் சிறு விவசாயிகள் உள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக இடுபொருள்களின் விலை அதிகரித்தபோதும் பருத்தி விளைச்சலில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால் பல உழவர்கள் தங்களது நிலத்தை விற்கவேண்டியிருந்தது. எனவே கிராமத்தில் வேளாண்மை செய்யப்படும் நிலங்களின் அளவு குன்றிவருவதால், தினக்கூலி ஊழியர்கள் வேலையின்றிப் போகின்றனர். பெருந்தொற்றும் பின்வந்த

ஒளிப்பட உதவி - பிரக்கிருதி

பணியட்டைதாரர் வங்கிக்கணக்கில் தனது கூலி சேர்க்கப்பட்டதை வங்கிக் கணக்கட்டையில் காட்டுகிறார்

பொதுமுடக்கமும் சூழலை மேலும் சீர்கெடச்செய்துள்ளது. விதைக்கும் பருவம், களையெடுக்கும் பருவம், அறுவடைக்காலம் ஆகிய பருவங்களில் பெண்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்கும். பெருந்தொற்றின் காரணமாக பெண்களுக்குக் கூலி வேலை கிடைப்பது கடினமானது. உழவர்களுக்கும் இழப்புகள் ஏற்பட்டதால் ஊதியம் கொடுத்து வேலைக்கு ஆள் அமர்த்தத் தயங்கினர். அவர்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களின் உழைப்பையே சார்ந்திருக்கத்தொடங்கினர். அதில் குழந்தைகளும் நகரத்திலிருந்து திரும்பியவர்களும் அடக்கம். இருக்கும் சில வேலைகளுக்குத் தனித்த பெண்கள் உழவர்களின் குடும்பத்தினரோடு போட்டி போடநேர்ந்தது.

அண்மைக்காலம்வரை நிர்மலாவுக்கோ கிராமத்திலிருந்த பிற பெண்களுக்கோ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் பற்றித் தெரிந்திருக்கவில்லை. அரசாங்கம் அவர்களது கிராமத்தில் ஏதோ பணி செய்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்திருந்தாலும் அது அவர்களுக்குத் தொடர்பில்லாத பணி என்று நினைத்து அதன்மீது கவனம் செலுத்தவில்லை. நிர்மலா பிரக்கிரிதி அளித்த பயிற்சியில் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு பிற பெண்களோடும் பகிர்ந்துகொண்டார். வேலைக்கான தேவையிருந்தும் பணி அட்டைகள் இல்லாத 18 பெண்கள் அடையாளம்காணப்பட்டனர். நிர்மலா முயற்சியெடுத்து அவர்களது ஆவணங்களை வாங்கி, வேலைவாய்ப்பு ஊழியரிடம் பணி அட்டைகள் பெற்றுத்தருவதற்காகச் சமர்ப்பித்தார்.

வேலைவாய்ப்பு ஊழியர் இப்பெண்களுக்குப் பணி அட்டைகள் வழங்குவதில் ஆர்வம் காட்டவில்லை. அவருக்கும் கிராமத்தலைவருக்கும் அப்பெண்கள் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தபோதும் அவர் நடவடிக்கை எடுக்கத் தயங்கினார். இறுதியாக நிர்மலாவின் முயற்சிகள் பலனளித்தன. எல்லாருக்கும் பணி அட்டைகளை வழங்கினர்.

எனினும் பணி அட்டை பெறுவது முதல் சவால்தான். தனித்த பெண்களை இத்திட்டத்தின்கீழ் வேலைக்கான கோரிக்கையை எழுப்ப ஊக்கமளிப்பது அதைவிடப் பெரிய சவால். பலருக்கும் இத்திட்டம் குறித்த தவறான புரிதல்கள் இருந்தன. இத்திட்டத்தின் கீழ் பணிசெய்வது விவசாயவேலை செய்வது அளவுக்கு மதிப்புமிகுந்த பணியாக அவர்கள் கருதவில்லை. எனவே அவர் இப்பணியும் விவசாயவேலை போன்றதுதான் என்றும் அதைவிடவும் கூடுதல் ஊதியம் கிடைக்கும் என்றும் புரியவைத்தார். தனித்த பெண்கள் தங்கள் குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டு வேறுகிராமங்களுக்குச் செல்லமுடியாததால் அருகிலிருந்த விவாசாய நிலங்களிலேயே பணியாற்ற விரும்பினர். இந்த ஆண்டு காலம்தவறிக் கனமழை பெய்ததால் களையெடுக்கச் செல்லமுடியாது. அறுவடை தொடங்கிவிட்டபோதும் விளைச்சல் குறைந்துவிட்டதால் பெண்களுக்குக் கூலிவேலை கிடைப்பது அருகிவிட்டது.

விளைவுகளும் படிப்பினைகளும்

கடினமான காலத்தில் பணி அட்டை உள்ள பெண்களை ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணியாற்ற நிர்மலா ஊக்கப்படுத்தினார். முதலில் மூன்றுபேர் பணிசெய்யத் தொடங்கினர். உஜ்வாலா, சந்தா ஆகியோர் பணிசெய்யத் தொடங்கினர். மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர். இத்திட்டத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் பிற இடங்களைவிட அதிகமாக இருப்பதாகக் கூறினர். ஒருநாள் மழையால் வேலைசெய்யமுடியாமல் போனபோதும் ஊதியம் கிடைத்ததாக ஒருவர் கூறினார். கருப்பை கீழிறங்குதல் போன்ற பாலுறுப்பியல் பிரச்சனைகள் பல பெண்களுக்கு இருந்தன. அதனால் அவர்களால் பருத்தியைக் குனிந்தெடுத்து இடுப்புப்பட்டையில் வைப்பது சிரமமாக இருந்தது. பெண்கள் சந்தித்த இத்தகைய சிக்கல்களை நிர்மலா பகிர்ந்துகொண்டார். ஆனால் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் அவர்கள் சமூகக் காடுகள் உருவாக்கும் பணியில் ஈடுபட்டது அவர்களுக்கேற்ற பணியாக இருந்தது. ஊதியம் அதிகமில்லாதபோதும் அது அவர்களுக்கு வசதியாக உள்ளது. அதைவிட முக்கியமாக பணி அட்டை இருப்பது அவர்களுக்கு ஒரு அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் வழங்கியிருப்பதாக உணர்ந்தனர். நெருக்கடிநேர மருத்துவக் காப்பீட்டுக்கும் அவர்கள் தகுதிபெறுகின்றனர். வேளாண்பணியாளர்களாக ஒருபோதும் அது அவர்களுக்குக் கிடைத்ததில்லை. இத்திட்டத்தில் பணியாற்றும் எல்லாப் பெண்களும் பணி அட்டை உடையவர்களாக அரசு அதிகாரிகளுடன் உரையாட முடிவதையெண்ணி மகிழ்கின்றனர்.

வேலைவாய்ப்பு ஊழியருக்கும் இப்பெண்களையெண்ணித் திருப்திதான். பணியில் உண்மையாக இருக்கின்றனரென்பதால் அவர் தொடர்ந்து மேற்பார்யிடவேண்டியதில்லை. நிர்மலாவுக்கு இது பெரிய கற்றல் அனுபவம். முதலில் இத்திட்டத்தைப் பற்றிய மேம்பட்ட புரிதல் கிடைத்தது. பிறகு அதைவிட முக்கியமாக, நெருக்கடிக் காலத்தில் பெண்களைத் திரட்டி அரசாங்கத் திட்டம் அவர்களுக்குப் பயன்தரும்படி செயல்படவைக்கமுடிந்தது. இப்போது ஊரக வேலைவாய்ப்புத் திட்டமிடும் பணியில் கிராம மட்டத்தில் ஈடுபடும் நம்பிக்கையுடன் இருக்கிறார்.

ஒளிப்பட உதவி - பிரக்கிருதி

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புறுதித் திட்ட இடத்தில் பெண்கள் பணிபுரிகின்றனர்

9. யமுனா கத்தரில் கோவிட்19 நெருக்கடிக்கு உழத்திகளின் எதிர்வினை

எழுதியவர்: விக்ரம் சிங்
இணை ஆசிரியர்கள் (மொழிபெயர்ப்பும் தொகுப்பும்) : ரிஷா ராமச்சந்திரன், முபாசிரா சைதி

ஒளிப்பட உதவி - விக்ரம் சிங்

யமுனா கத்தரிலுள்ள இளைஞர்கள் குழு கோவிட்19 தேசியப் பொதுமுடக்கத்தின்போது நிவாரணப் பொருள்களைப் பொட்டலம் கட்டுகின்றனர்

கிழக்கு தில்லியில் வஜ்ராபாத் செல்லும் தில்லி-நொய்டா மேம்பாலத்தின் நெடுக அமைந்துள்ளது யமுனா கத்தர் (யமுனை நதியோரச் செழிப்பான நிலம் என்று பொருள்). இங்கு காமன்வெல்த் அரங்கம், அக்சர்தாம் கோயில் போன்ற பல இடங்கள் இருந்தாலும் வேளாண்மைப் பகுதி என்றும் பெயர் பெற்றது. இங்குள்ள வேளாண் சமூகம் இந்திய விடுதலையின்போதிருந்தே இங்கு வாழ்ந்துவருகின்றனர். தில்லி உழவர்கள் கூட்டுறவு பல்நோக்குச் சங்கம் (DPCMS) தில்லி வளர்ச்சி ஆணையத்துடன்(DDA) ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின்படி வேளாண்மைக்குச் சிறுநிலங்களை ஒதுக்கியுள்ளனர். இதற்கு வாடகையும் வசூலித்துவந்தனர். ஆனால் DDA இதை 1966ல் ரத்துசெய்தபோதும், உழவர்களிடமிருந்து 2010வரை வாடகை பெறப்பட்டது. எனினும் இரண்டாண்டுகளுக்குள் வேளாண் சமூகத்தின் குடியிருப்புகள் தயவின்றி இடித்துத்தள்ளப்பட்டன.

கோவிட்19 தேசியப் பொதுமுடக்கமும் அதன் பாதிப்புகளைக் குறைப்பதில் உழத்திகளின் பங்கும் இளைஞர்களின் பங்கும்

2020 மார்ச் 24ம் நாள் அரசாங்கம் பொதுமுடக்கத்தை அறிவித்தது. மக்கள் நகர்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. உள்ளூர்ச் சந்தைகள் மூடப்பட்டன. உழவர்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தப்பட்டது. வீதியில் விற்கும் சிறுவணிகம் அனுமதிக்கப்பட்டபோதும்கூட, யமுனா கத்தரின் காய்கறி வியாபாரிகள் காவல்துறையினரின் தடியடிகளைச் சந்திக்கவேண்டியிருந்தது. கூடுதலாக, யமுனையில் வெள்ளப்பெருக்கால் பயிர்கள் அழிந்தன. அதனால் பொதுமுடக்கத்தின்போது பூச்சிக்கொல்லிகளின் விலையும் அதிகரித்தது. புதிய வெள்ளாமை செய்வதற்குப் போதிய சேமிப்பில்லாததால், யமுனை கத்தரின் வேளாண் குடும்பங்கள் ஏழ்மையில் ஆழ்ந்து செல்லும் ஆபத்திலிருந்தனர்.

ஒளிப்பட உதவி - விக்ரம் சிங்

யமுனா கத்தர் குழந்தைகளுக்கு சனிக்கிழமைச் சிறப்பு நீதி வகுப்புகள் எடுக்கிறார் விக்ரம்

யமுனை கத்தரைச் சேர்ந்த மாலா என்ற உழத்தி வாடகை வேளாண் நிலத்திலிருந்து கிடைத்த தனது விளைச்சலைச் சந்தையில் விற்று வாழ்ந்துவந்தார். பொதுமுடக்கம் கொடுத்த கூடுதல் அதிர்ச்சியால் பட்டினியையும் பெருந்துயரையும் அவளது குடும்பம் எதிர்நோக்கியிருந்ததாகக் கூறுகிறார். மாலாவைப் போலவே இங்குள்ள பலரும் உத்தரப் பிரதேசத்திலிருந்தோ பிகாரிலிருந்தோ தலைநகர் தில்லிக்கு வேலைதேடிப் புலம்பெயர்ந்து வந்தவர்கள். விமலா தேவி உத்தரப் பிரதேசத்தின் பதாவுன் மாவட்டத்திலிருந்த ஒரு சிறு கிராமத்திலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பு புலம்பெயர்ந்து வந்தவர். விமலாவுக்கு அன்றுமுதலே வேளாண்மைதான் வருமானத்துக்கான தலையாய வழியாக இருந்திருக்கிறது. ஆனால் வேளாண்மை மூலம் பொருளீட்ட ஏற்பட்ட தடைகளாலும், பொதுமுடக்கம் கொண்டுவந்த கூடுதல் இடர்களாலும், அவர் வேறு தொழில்களையும் மேற்கொள்ள முடிவுசெய்தார். 'விவசாயத்திலிருந்து மிகக் குறைவான வருமானமே வரத்தொடங்கியபோது, என் குடும்பத்தைக் காப்பாற்ற நான் உள்ளூர்ச் சந்தையில் ஒரு சின்ன இனிப்புக் கடை போட்டேன்,' என்கிறார். வேளாண்மைக்கு ஆகும் அதிக செலவுகளைக் கருத்தில் கொண்டு, வேறுசில உழத்திகளும் தமது தொழில்முனையும் ஆற்றலைக் காட்டி, தங்கள் வாழ்வாதாரத்துக்கு வேறு தொழில்கள் தொடங்கினார்கள். குடியா என்கிற இளம் உழத்தி ஒரு நாற்றுப்பண்ணையைத் தொடங்கினார். 'இது எனது பொருளாதார நிலைமையை உயர்த்த உதவுகிறது. சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு உதவும் பசுமைத்திட்டமும் கூட,' என்கிறார். இத்தகைய சான்றுகள் பெண் தொழில்முனைவோர் இந்த நெருக்கடியின்போது அரசாங்கத்திடமிருந்து எந்த உதவியுமில்லாமல் உருவாகி, தங்களது குடும்பங்களைக் காப்பாற்றியுள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. இப்பகுதியின் பல ஏழைக் குடும்பங்களுக்கு அகவெழுச்சி தந்துள்ளனர்.

பல நிச்சயமின்மைகளுக்கு இடையே, யமுனை கத்தரைச் சேர்ந்த பெண்கள் முன்னே வந்து தலைமைப் பண்புகளை வெளிப்படுத்தி ஆதரவு எங்கெல்லாம் கிடைக்கிறதோ அங்கு பிணையப் பாலங்களை ஏற்படுத்தியுள்ளனர். சான்றாக, மாலா இச்சமூகத்தில் உணவுப் பாதுகாப்பின்மைப் பிரச்சனையை எழுப்பி, பொது விநியோகக் கடைகளிலிருந்தும் இ-கூப்பன்களைப் பயன்படுத்தியும் பங்கீட்டை வாங்குவதிலுள்ள சிக்கல்களையும் கவனப்படுத்தினார். இச்சமூகக்குழுவில் துடிப்புடன் சமூகப்பணியாற்றி வந்த இளைஞரான விக்ரம் என்பரைத் தொடர்பு கொண்டார். விக்ரம் பஸ்தி சுரக்ஷா மன்ச் போன்ற குடிமைச்சமூகக் குழுக்களையும் தனிநபர்களையும் சந்தித்து இப்பிரச்சனையை எழுப்பினார். மாலாவும் விக்ரமும் அப்பகுதியிலிருந்த 1400 குடும்பங்களுக்குத் தேவையான உணவுப்பொருள் ரேசனை வாங்கினர். அவர்களில் கணவனை இழந்த பெண்கள் 100 பேரும், தனித்த பெண்களின் குடும்பங்களும் அடக்கம்.

அதே போல, நகரத்தில் வேலைகிடைக்காமல், காட்டுப் பகுதிகளில் தங்கிவிட்ட புலம்பெயர் தொழிலாளர்களும் பட்டினியின் விளிம்பில் இருந்தனர். குடியாவின் உதவியோடு விக்ரம் அவர்களைச் சந்தித்து அவர்களது துன்பங்களையும் தேவைகளையும் புரிந்துகொண்டு பஸ்தி சுரக்ஷா மன்ச்சையும் தில்லி மக்காமையும் தொடர்பு கொண்டார். அவர்கள் மூலமாக அவசர நிவாரணமாக

உணவையும் பிற அத்தியாவசியப் பொருள்களையும் கொண்டு சேர்த்தார். இதன்மூலம் 110 புலம்பெயர் குடும்பங்கள் பலன்பெற்றனர். குடியா, மாலா, விக்ரம் ஆகியோர் வெளிப்படுத்திய சமூகத்தலைமையால் தில்லி மக்காம் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சென்றடைய முடிந்தது.

பள்ளிகளும் அங்கன்வாடிகளும் மூடப்பட்டது பெருந்தொற்றின் மறைமுக பாதிப்புகளில் ஒன்று. தங்களால் திறன்பேசிகளை வாங்கமுடியாது என்பதாலும் அப்பகுதியில் மோசமான மின் இணைப்பு இருப்பதாலும் தங்களது குழந்தைகளால் சரியாகப் பயில முடியாது என்றும் பள்ளியிலிருந்து வெளியேறுபவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் பெண்கள் அச்சப்படுகின்றனர். வேளாண்மை செய்யும் ரமாஸ்ரீ பெண் குழந்தைகள் பொதுமுடக்கத்தின்போது பள்ளியிலிருந்து அதிகமாக நிறுத்தப்படுகின்றனர் என்றும், அதனால் இளவயதிலேயே திருமணமாவதும் அதிகரித்துள்ளது என்றும் கூறினார். அவரது குழந்தைகளே சரிவரப் படிக்க முடியாமல் உள்ளனர். விக்ரம், அவரது சகோதரர், நண்பர்கள் கூடி குழந்தைகளுக்கு, குறிப்பாகப் பெண் குழந்தைகளுக்கு ஏழாம் வகுப்புவரை இலவசமாகப் பாடம் எடுக்க முன்வந்தனர். ரமாஸ்ரீயின் ஐந்து குழந்தைகளோடு தொடங்கினார்கள். இப்போது யமுனா கத்தரில் 250 குழந்தைகளுக்குக் கற்றுத்தருகிறார்கள். குழந்தைகளின் கல்விக்கு உதவுவதன்மூலம் வேளாண் சமூகத்தின் வருங்காலத் தலைமுறைகளை அதிகாரப்படுத்தி, வேளாண்மை குறித்த விழிப்புணர்வையும் வழங்கி, இச்சமூகம் சுரண்டப்படுவதைத் தடுப்பதே தங்களது நோக்கம் என்று வலியுறுத்துகிறார் விக்ரம்.

பெருந்தொற்றிலிருந்து கிடைத்த படிப்பினைகள்

அடிப்படை உரிமைகள் வழங்கப்படாததால், யமுனை கத்தரிலுள்ள பெண்களும் இளைஞர்களும் தலைமையேற்று, குடிமைச் சமூகக் குழுக்களான தில்லி மக்காம், பஸ்தி சுரக்ஷா மன்ச் போன்றவர்களைத் தொடர்பு கொண்டு கூட்டாக ஒரு பிணையத்தை ஏற்படுத்தினர். இத்தகைய சமூகக்குழு எதிர்வினை கோவிட் பொதுமுடக்கம் பெரிதுபடுத்திய ஆபத்துகளை எதிர்கொள்வதற்கான அதன் வலிமையைக் கூட்டியது. விளிம்புநிலை மக்கள் ஏற்கனவே சந்திக்கும் சவால்களையும் பாதிப்புகளையும் பொதுமுடக்கம் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது. அதே வேளையில் இந்த மக்களின் நெகிழ்வுறுதியையும், அவர்களது திறன்களையும் முன்னெடுப்புகளையும் முன்னெப்போதுமில்லா நெருக்கடியை எதிர்கொண்ட விதத்தையும் எடுத்துக்காட்டியது.

இந்த நிகழ்தகவில் உள்ள அனுபவங்களை, அவற்றில் முக்கிய பங்காற்றிய விக்ரம் சிங் வாய்மொழியாகப் பகிர்ந்துகொண்டார்.

ஒளிப்பட உதவி - விக்ரம் சிங்

2020ம் ஆண்டு மே மாதம் பயிர்களை அறுவடை செய்யும் ஆண்களும் பெண்களும். பொதுமுடக்கக் கெடுபிடிகளால் அருகிலுள்ள சந்தையில் இப்பயிர்களை விற்கமுடியாமல் உழவர்கள் கடன்படத்தொடங்கினர்

10. கோவிட்19ன் போது உழத்திகளின் மாற்று முறைகள்

எழுதியவர் : சி. பனுஜா, இயக்குநர், REDS

ஒளிப்பட உதவி REDS

ஊரக சுற்றுச்சூழல் வளர்ச்சிக் கழகம் (REDS - ரெட்ஸ்) எனப்து ஆந்திரப் பிரதேசத்தின் அனந்தபுரமு மாவட்டத்தின் 10 மண்டலங்களிலுள்ள 58 கிராமங்களில் பணியாற்றிவரும் இலாபநோக்கற்ற தொண்டுநிறுவனம். பெண்களின் உரிமைகள், குழந்தைகளின் உரிமைகள், மனிதக்கடத்தல் குறித்த விழிப்புணர்வு, வேளாண்மை, இயற்கை வளங்களின் மேலாண்மை ஆகிய துறைகளில் கடந்த 25 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றனர். இந்நிறுவனம் உழவர்களை - அதில் பெரும்பாலோர் பெண்கள், ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை (உஉநி) உருவாக்கியுள்ளது. பல்பயிர் வேளாண்மையை முன்வைப்பது மூலம் இந்த வறட்சி மிகுந்த மாவட்டத்தில் உள்ள கடுமையான வேளாண்மை நெருக்கடியை எதிர்கொள்ள முனைகிறது. கோவிட் பொதுமுடக்கத்தின்போது உழத்திகள் கூட்டமைப்புகளோடு இணைந்து பாதிப்படையக்கூடிய குடும்பங்களுக்கு உணவு வழங்குதல், உழவர்களுக்குச் சந்தைப்படுத்தும் வசதிகள் வழங்குதல் ஆகிய நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். அரசுத்துறைகளுடன் இணைந்தும் பல நிவாரணப் பணிகளும் புனர்வாழ்வுப் பணிகளும் ஆற்றப்பட்டன.

திடீர் பொதுமுடக்கம் சிறுகுறு விவசாயிகளையும் புலம்பெயர் தொழிலாளர்களையும் வேலைவாய்ப்பின்மை, சந்தைகள் இல்லாதது, உணவுத்தட்டுப்பாடு ஆகியவற்றால் கடுமையான இடர்களுக்கு ஆட்படுத்தியது. அதே வேளையில் இங்கிருந்து பிற இடங்களுக்கு புலம்பெயர்ந்தவர்கள் தங்களது கிராமங்களுக்குத் திரும்பத் தொடங்கினர். இது கிராமப் பகுதிகளில் பெரிய சமூக, பொருளாதார அழுத்தத்தை ஏற்படுத்தியது. தனித்த பெண்களும், தற்கொலை செய்த விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். உழவர்களும் பால் உற்பத்தியாளர்களும் தங்கள் விளைபொருள்களை விற்பதற்கு அரும்பாடுபட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவும், அழியக்கூடிய விளைபொருள்களைச் சந்தைப்படுத்த உதவியும் வழங்க மிகப்பெரிய அளவிலான இடையீடு தேவைப்பட்டது.

ஒளிப்பட உதவி REDS

இடையீடு

ரெட்ஸ் அணி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர்களோடு இணைந்து பிரச்சனைகளை அறிந்து தீர்வுகள் காண ஒரு திட்டத்தை வகுத்தது. உழவர்களிடமிருந்து விளைபொருள்களை வாங்கி, தேவைப்படுவோர்க்குப் பகிர்ந்தளிக்க ஏற்பாடுகள் செய்தனர். முதல்படியாகக் கிராமங்களுக்குச் சென்றனர். கீரைகளும் காய்கறிகளும் தயாராக இருந்தன என்றும், வாழையும் பப்பாளியும் அறுவடைக்குத் தயாராக இருந்தன என்றும் கண்டனர். இரு நிறுவனத் தலைவர்களும் உழவர்களோடு உரையாடி, விளைபொருள்களை வாங்கினர். உலர் உணவுப் பொருள்கள், முட்டை, காய்கறி, பழங்கள் ஆகியவை உட்பட 20 பொருள்கள் கொண்ட உணவுக் கூடைகளை உணவு வாங்க இயலாத குடும்பங்களுக்கு வழங்கினர். முகக்கவசங்களும் சானிடைசர்களும் வழங்கினர். உஉநி ஒன்பது வகை சிறுதானியங்கள், பருப்புகள், வீட்டுத்தோட்ட விதைப் பொட்டலங்கள், நிலக்கடலை விதைகள் ஆகியவற்றை உழத்திகளிடமிருந்து வாங்கி, பிற உழவர்களுக்கு கார்காலச் சாகுபடிக்கு இலவசமாக வழங்கினர். மாவட்டத்திலுள்ள 10 மண்டலங்களிலும், 30 கிராமங்களிலும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அனந்தபூர் மண்டலின் கமருப்பள்ளி கிராமத்தில் ஒருவருக்கு கோவிட் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதால், முழு கிராமமும் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்ட, கடுமையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அனந்த கிராமீனா பெண்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைவரான ஆர்.சுசீலாம்மா அக்கிராமத்திலுள்ள உழத்திகள் உற்பத்திசெய்த எல்லாக் காய்கறிகளையும் பழங்களையும் விலைக்கு வாங்கி, தேவைப்படும் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கினார்.

அனந்தபூர் மண்டலின் பூலகுந்தா கிராமத்திலிருந்த 220 குடும்பங்கள் தாங்கள் வைத்திருந்த பசுக்களின் பால் உற்பத்தியை விற்க முடியாமல் போனது. உஉநி தலைமைக்குழு உறுப்பினர் அருணம்மாவும் ரெட்ஸ் அமைப்பும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து கிராமத்துக்கு வெளியே ஒரு பால் பண்ணையை நிறுவி, கிராமத்திலிருந்து எல்லாப் பாலையும் சேகரித்து, தனியார் வணிகர்களுக்கு விற்றனர். இவ்வாறாக பால் உற்பத்தியாளர்களுக்கு சந்தைப்படுத்தும் வசதியை வழங்கினர்.

அனந்தபுரமு மாவட்ட அளவில் அரசுத்துறைகளும் ரெட்ஸ் உட்பட பல தொண்டு நிறுவனங்களும் ஒன்றிணைந்து பிரச்சனைகளைக் கணக்கெடுக்கவும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ஒரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்பட்டது. பல நிறுவனங்கள், தனிநபர்களின் துணையுடன் பல கிராமங்களில் நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தமுடிந்தது. நிதி, ஆலோசனை, ஒருங்கிணைப்பு என்று பலவித உதவிகள் செய்யப்பட்டன.

தினக்கூலி ஊழியர்கள், வேளாண் குடும்பங்கள், தனித்த பெண்கள், முதியவர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட 7200 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

24 கிராமங்களில் இருந்த 500 குடும்பங்களுக்கு உணவுக்கூடைகள் வழங்கப்பட்டன. 300 குடும்பங்களில் பெண்களுக்கும் பதின்வயதுச் சிறுமிகளுக்கும் உதவும் வகையில் சுகாதாரப் பொருள்கள் வழங்கப்பட்டன. குடும்ப அட்டைகள் இல்லாத 100 குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசியும் 5 கிலோ கேழ்வரகும் வழங்கப்பட்டது.

கமாருப்பள்ளி, பூலகுந்தா ஆகிய கிராமங்களில் பசுமாடுகள் வைத்திருந்த 73 குடும்பங்களுக்குத் தலா 50 கிலோ தீவனம் வழங்கப்பட்டது. கமாருப்பள்ளி, குருகுண்டா, பூலகுண்டா, கொடிமி ஆகிய கிராமங்களிலுள்ள 223 குடும்பங்களுக்கு விதைகள் வழங்கப்பட்டன.

விளைவுகள்

நிவாரணப் பணிகள் வழங்குவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் உழத்திகள் ஒன்றுசேர்ந்து கூட்டு வேளாண்மையும் சந்தைப்படுத்துதலும் செய்ததால் உணவும், விதைகளும் பெருமளவு கையிருப்பில் சேர்க்கமுடிந்தது. பிறருக்கும் வழங்க முடிந்தது. பிற உழவர்களுக்கு விதைகளை வழங்கியது கார்கால வேளாண்பருவத்துக்கு விதைப்பாதுகாப்பும், விதைகளை உற்பத்திசெய்த உழத்திகளுக்கு கூடுதல் வருமானமும் கிடைத்தன. அரசு வேளாண்மைத் துறையும் மாவட்ட ஆட்சியரும் பெண்கள் உழவர் உற்பத்தி நிறுவனங்களின் திறனை உணர்ந்து, அவர்களிடமிருந்து MARKFED மூலமாக விளைபொருள்களை வாங்கிக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வந்துள்ளனர். வேளாண்மைத்துறை செயல்படுத்தும் எல்லாத் திட்டங்களிலும் பெண்களை ஈடுபடுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஒளிப்பட உதவி REDS

11. கோவிட்-19 பொதுமுடக்கமும் உழத்தியரும்: இடையீட்டுக்கான தேவை

எழுதியவர்: பாத்திமா பர்னாட், SRED, தமிழ்நாடு

ஒளிப்பட உதவி SRED

SRED FPO உணவு நிவாரணப் பொட்டலங்களை வழங்குகின்றனர்

கிராமப்புற கல்விக்கும் வளர்ச்சிக்குமான கழகம் (SRED - கி.க.வ.க. - சிரெட்) 1979ம் ஆண்டு தொடங்கப்பட்டு, அடிமட்ட ஊழியர்களின் தேவைகளையும் சிக்கல்களையும் சார்ந்த இயக்கங்களை வளர்த்துக் கொண்டுள்ளது. பட்டியலினங்கள், கிராமப்புற பழங்குடிச் சமூகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பெண்கள் மீது முக்கிய கவனம் செலுத்தினர்.

சிரெட் உள்ளூர் தலைவர்கள், மக்களியக்கத் தலைவர்கள் ஆகியோரது திறன்மேம்பாட்டில் ஈடுபட்டுள்ளது. நுண்ணிய மட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை, சாதி பாலினப் பாகுபாடு, வாழ்வாதாரச் சவால்கள், உடல்நலமும் கல்வியும் மறுக்கப்படுதல் ஆகிய பிரச்சனைகளில் சிரெட் இடையீடு செய்கிறது. பேரிய மட்டத்தில், சிரெட்டால் ஆதரிக்கப்படும் இயக்கங்களோடும், பிற இயக்கங்களோடும் கைக்கோர்த்து பரப்புரைகள், தொடர்புவலைப்பின்னல், கூட்டணிகளை உருவாக்குதல் ஆகியவற்றில் தமிழ்நாட்டளவிலும் தேசிய உலகளாவிய அளவிலும் சிரெட் ஈடுபடுகிறது.

தலித்கள், நிலமற்ற ஊழியர்கள், இருளர் பழங்குடியினர், செங்கல்சூளைப் பணியாளர்கள், மாட்டுவண்டி ஓட்டுநர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், தலித் பெண்கள் (கிராமப் பெண்கள் விடுதலை இயக்கம்), உழத்தியர், கலவிப் பணியாளர்கள், மத்தம்மா (இறைவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட தலித் பெண்கள்), தெருவோர வணிகர்கள் ஆகியோரிடையே சிரெட் கிராமத் தொழிலாளர் இயக்கங்களைத் தோற்றுவித்து ஆதரிக்கின்றது.

இச்சமூகங்களிலிருந்து வரும் பெண்கள் வேளாண் சூழியலில் பயிற்சியளிக்கப்படுகின்றனர். நிலமில்லையெனினும் வேளாண் முறைகளைப் பயில்கின்றனர். பிற சாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரசு நிலங்களை அடையாளம் கண்டு அவற்றின் மீதான தங்கள் உரிமைகளைக் கோருவதற்கும்

ஒளிப்பட உதவி SRED

விதைப்பொட்டலங்கள் உழத்திகள் குழுக்களுக்கு வழங்கப்படுகின்றன

பயிற்சி பெறுகின்றனர். நிலவுடைமைக்கான தேவையை உணர்ந்ததால், தங்கள் கிராமங்களில் உள்ள அரசு நிலங்களைக் கண்டறிந்து வருவாய்த்துறை அதிகாரிகளின் துணையோடு முதலில் 7.55 ஏக்கர் நிலத்தையும் பின்னர் மேலும் 5 ஏக்கர் நிலத்தையும் மீட்டுக் கூட்டு வேளாண்மை செய்யத் தொடங்கியுள்ளனர். அந்நிலத்தில் பணிபுரிந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் அறுவடையில் பங்கு கிடைத்தது. இத்தகைய பெண்கள் கூட்டுப் பண்ணைகள் 5 மாவட்டங்களில் உள்ளன.

கோவிட்-19 பெருந்தொற்றும் இடையீடும்

2020ம் ஆண்டு மார்ச் 24ம் நாள் கோவிட்-19 பொதுமுடக்கம் தொடங்கி இன்னும் சில தளர்வுகளுடன் தொடர்கிறது. ஏழைகள் உணவுக்கும் வாழ்வாதாரத்துக்கு வழியில்லாமல் விடப்பட்டனர். உண்ணவும் உயர்வாழவும் எந்த வழியும் இல்லாது கைவிடப்பட்டனர். பெண்கள் குடும்பத்தினரின் வன்முறைக்கும் பிற வன்முறைகளுக்கும் ஆளாயினர். அரசாங்கங்கள் ஏழைகளின் பிழைப்பிற்கு வழிசெய்வதில் அக்கறை காட்டவில்லை; வெறுமனே வீட்டில் அடைபட்டுக் கிடக்கச் சொன்னார்கள்; பெண்களின் எதிர்ப்பையும் மீறி மதுக்கடைகளைத் திறப்பதில் அவசரம் காட்டினார்கள். இது பெண்கள் மீதான வன்முறையை மேலும் அதிகப்படுத்தியது. தலித் பெண்கள் வன்புணர்வு செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பின்றி உணவு வாங்கப் பணமுமில்லை. உணவின்மை குடும்ப வன்முறையை அதிகரித்தது. பெண்கள் வருமானமின்றித் தவித்தனர். கடன்களைத் திரும்பக்கட்டவும், குடும்பங்களுக்கு உணவளிக்கவும் முடியாது போயினர்.

அரசாங்கத்தால் ரூ.1000 கொடுக்கப்பட்டது. ஆனால் இது எல்லாரையும் சென்றடையவில்லை. இத்தொகை நீண்ட நாட்கள் பயன்தரவும் இல்லை. சத்துணவை நம்பியிருந்த குழந்தைகள் பள்ளிகள் மூடப்பட்டதால் உணவின்றி இருந்தனர். பொதுப் போக்குவரத்து முடக்கப்பட்டதால், கூட்டு வேளாண்மை செய்த உழத்தியர் பிற உழத்தியரோடு தகவல் பரிமாற முடியாமல் போனது. சிறுதானியங்கள் விதைத்தபின்னர் தங்கள் நிலங்களுக்குச் செல்லமுடியாதற் போனது.

எல்லாரும் தங்கள் குடும்பங்களும் கிராமத்தினரும் பிழைக்க வழிதேடிப் போராடிக்கொண்டிருந்தபோது, உழத்தியர் கூட்டமைப்பைச் சேர்ந்த சகீலா மாறுபட்ட முறையில் சிந்தித்துச் செயல்பட்டார். உணவும் பாதுகாப்புப் பொருள்களும் கொண்ட நிவாரணப் பொருள்களைப் பெற்று கிராமத்தினர்க்குப் பகிர்ந்து வழங்கினார். இது பெரும் பணி. எனினும் காவல்துறையினர் கண்களில் படாமல் வீடுவீடாகச் சென்று தன்னால் இயன்றதைச் சேகரித்தார். தன்னார்வலர் குழுவொன்றை அமைத்தார். புத்தா இயக்க அறக்கட்டளையிலிருந்து உணவுப்பண்டங்கள் பெற்று வயதான தனித்த பெண்களுக்கும், உடல் குறைபாடுடைய பெண்களுக்கும், பழங்குடியினருக்கும், துணி துவைக்கும் பெண்களின் குடும்பங்களுக்கும் வழங்கினார்.

உழத்தியருக்குத் தலா 1000ரூ வழங்கி, மூன்று முறை 1000ரூ மதிப்புள்ள உணவுப்பண்டங்களையும் சிரெட் வழங்கியது. சிரெட்டுக்கு உதவ முன்வந்த சகீலா, கூட்டமைப்பைச் சேர்ந்த உழித்தியர் தலைவர்களுக்கு அவற்றை வழங்கினார்.

மாவட்டத்துக்குள் பயணம் செய்ய முடிந்தபோது, சகீலாவும் அவரது அணியினரும் கூட்டுப்பண்ணைகளில் என்னென்ன அறுவடை செய்யமுடியுமோ அவற்றைச் செய்தனர். கூட்டமைப்பின் பிற தலைவர்களை அழைத்து வேளாண் விளைபொருள்களைப் பயன்படுத்துவதற்கும், கிராமங்களிலும் நகரங்களிலும் இருந்த கொடையாளர்களின் உதவியைத் திரடத்துவதற்கும், மாநில அரசு, புத்தா இயக்க அறக்கட்டளை, சிரெட் ஆகியோரின் ஆதரவைப் பெறவும் வழிகாட்டினார். கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை அடையாளம் கண்டு, அவர்கள் தொற்றுக்காலத்தைத் தாண்ட உதவினார்.

சமூகச் சமையலறைகளை அவரவர் கிராமங்களில் அமைத்து, உணவு சமைத்து, கிராம மக்களுக்கு வழங்கினர். அரசாங்கம் சமையல் எரிவாயுவை விலையின்றித் தந்தது.

அவரது செயல்பாடு பல உயிர்களைக் காத்தது; உணவு கிடைக்காமல் நிகழ்ந்திருக்கக்கூடிய தேவையற்ற மரணங்களையும் தற்கொலைகளையும் தடுத்தது. சிரெட் மூலமாக 3000 குடும்பங்கள் தம் வங்கிக் கணக்குகளில் பணம் பெற்றனர். மேலும் உணவுப் பொட்டலங்கள், முகக்கவசங்கள், கபசுரக்குடிநீர், ஆயுர்வேத மருந்துகள் ஆகியவற்றைப் பெற்றனர்.

கூட்டுப்பண்ணைகளை உழத்தியர் ஈடுபாட்டுடன் பெருந்தொற்று அச்சுறுத்தலையும் போக்குவரத்துத் தடைகளையும் தாண்டி உயிர்ப்புடன் வைத்திருந்தனர். பிற பெண்களும் இத்தகைய முன்னெடுப்புகள் எடுக்க ஈர்க்கப்படுகின்றனர். எத்தகைய சவால்களையும் இடர்களையும் சந்தித்து மீளமுடியும் என்ற நம்பிக்கை பெற்றுள்ளனர். பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் கூட்டுப் பண்ணைத் தொடங்க அவர்களை அழைக்கின்றனர்.

நிலத்தைக் கூட்டாக வைத்திருப்பது ஒரு பெரிய வலிமை. இதுவே கொரோனா தொற்றுக்கு எதிரான தடுப்புசக்தியை அதிகப்படுத்தியது - தொற்று குறித்த அச்சத்தை நீக்கியது - ஒவ்வொரு பெண்ணும் தேவையிலிருந்த பிற பெண்களைத் தொடர்புகொண்டனர். கூட்டுப்பண்ணை உறுப்பினர்களாக அவர்கள் ஒன்றிணைந்து நின்றனர். ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்தனர். பொது நோக்கத்துக்காக ஒற்றுமையாக இருப்பது கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தும் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ளமுடியும் என்பதை உணர்ந்தனர். பெருந்தொற்று போன்ற சவாலான சமயத்திலும் இயக்கங்கள் தேய்ந்துபோகாமல் மேலும் வலுவாக வளர்ந்துகொண்டிருக்கின்றன.

ஒளிப்பட உதவி SRED

உழத்திகள் ஒன்றுகூடிக் கூட்டமைப்பு வேளாண்மை செய்கின்றனர்

12. கோவிட்-19 காலத்தில் சிறுதானியங்களுக்குத் திரும்புதல்

எழுதியவர்கள்: பெண்கள் முன்னெடுப்புகள் (வின்ஸ்)

ஒளிப்பட உதவி WINS

பெண்கள் முன்னெடுப்புகள் (வின்ஸ்) அமைப்பு கடந்த மூன்றாண்டுகளில் ஆந்திர மாநிலத்தின் சித்தூர் மாவட்டத்திலுள்ள 35 கிராமங்களில் பட்டியலினத்தைச் சேர்ந்த 1080 குத்தகைதார உழவர்களையும் வேளாண் பணியாளர்களையும் வலுப்படுத்துவதிலும் அதிகாரப்படுத்துவதிலும் வெற்றிகண்டுள்ளது. பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அவர்களை அதிகாரப்படுத்தியுள்ளனர். பசுமை வேளாண் முறைகளை ஏற்றுக்கொண்டு, உழவர்-உற்பத்தியாளர் நிறுவனங்களில் தங்கள் திறன்களை முதலீடு செய்யும் நம்பிக்கையைப் பெற்றுள்ளனர். உழத்தியருக்கான உரிமைகளுக்காக அமைக்கப்பட்ட மகிளா ரைது வேதிகா என்ற மன்றத்தில் தங்களது கருத்துகளைக் கூறுவதற்கான தளம் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண்மையிலும், தாங்கள் பயின்றதை ஏழைகளையும் விளிம்புநிலைப் பெண்களையும் ஒன்றிணைக்கப் பயன்படுத்துவதிலும் இப்பெண்கள் காட்டும் ஆற்றல், ஈடுபாடு, துணவு ஆகியவை போற்றுதலுக்குரியன.

ஒருமாதகாலப் பொதுமுடக்கம் பெண்களுக்குத் தாங்கவியலாததாக இருந்தது. அது நீட்டிக்கப்பட்டபோது, அவர்கள் பொருளாதார ரீதியாக உடைந்துபோயினர்; அவர்களும் அவர்களது குடும்பங்களும் பட்டினியைச் சந்தித்தனர். அவர்களது நம்பிக்கை தளர்ந்தது. போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் விளைபொருள்களை விற்பதும் கால்நடைகளை மேய்ப்பதும் கடினமாகின. அதனால் பயிர்கள் வாடின, கால்நடைகள் பட்டினி கிடந்தன, பால் உற்பத்தி குன்றியது. அவர்கள் இருந்த பகுதிகளில் தொற்று ஏற்பட்டதால் அரசுத் தடுப்புகள் அமைக்கப்பட்டன. வீட்டில் வேலைவாய்ப்பின்றி முடங்கியிருந்த பெண்கள் நரகவேதனை அனுபவித்தனர். தங்களுக்கும் தொற்று ஏற்படும், அதை குணப்படுத்தமுடியாது போன்ற கவலைகளும் வதந்திகளும் அவர்களைப் பீடித்தன. அரசு கொடுத்த உலர்ந்த நிவாரணப்

ஒளிப்பட உதவி WINS

பொருள்கள் போதுமானவையாக இல்லை. நீளமான வரிசைகளும், குறைந்த வேலைநேரமும் இருந்ததால் ஏழைப்பெண்கள் அவற்றால் பெரிதாகப் பயனடையவில்லை. பலர் வெறுங்கைகளுடனும் பட்டினியாகவும் திரும்ப நேர்ந்தது.

ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்திலுள்ள சிஜி கல்லு, ரோம்பிசேர்ல மண்டலம் ஆகியவை மானாவாரிப் பகுதிகள். 60 விழுக்காட்டினர் ஆண்டுக்கு இருமுறை கலப்பினத் தக்காளிகளைப் பயிரிடுகின்றனர். அது நல்ல விலைபெற்றுத்தந்தாலும் முதலீடு அதிகம் தேவைப்படும். மேலும் பிறரது நிலங்களில் கூலி வேலையும் செய்வர். ஒற்றைப் பயிர்ச் சாகுபடி முறை - மாந்தோப்பாக இருந்தாலும் கடலையாக இருப்பினும் துன்பத்துக்கே இட்டுச்சென்றது. அவர்களுக்கிருந்த மிகச்சிறிய நிலங்களை உழத்தகுதியற்றவை என்று தரிசாக விட்டிருந்தனர். அச்சமயத்தில்தான் வின்ஸ் அமைப்பு உழத்தியரை ஒருங்கிணைக்கும் எண்ணத்தோடு நுழைந்தது. வீட்டுத்தோட்டத்தில் வளர்க்க 12வகைக் காய்கறிகளுக்கான விதைகளைக் கொடுத்தனர். இச்சோதனைக் காலங்களில் அது கைகொடுத்தது.

முன்பு சிறுதானியங்கள் அவர்களது முதன்மை உணவாக இருந்தபோதும் நாற்பதாண்டுகளாக அவை காணாமல் போயிருந்தன. கிராமங்களில் 1% நிலங்களில் மட்டுமே பயிரிடப்பட்டதால் அவற்றின் விலை அவர்களுக்கு கட்டுபடியாகாமல் போயிற்று. தடுப்புசக்திக்கும் கோவிட் எதிர்ப்புசக்திக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று வல்லுனர்கள் கூறியதால் செல்வந்தர்கள் அவற்றைப் பயன்படுத்தத்தொடங்கினர். இதைப் பற்றி அறிவுறுத்தப்பட்டபோது பெண்கள் ஊட்டமிக்க உணவுக்காகச் சிறுதானியங்களைப் பயிரிடத் தொடங்கினர். வீட்டுத்தோட்டங்களுக்கு மாடுகள் சார்ந்த இயற்கை வேளாண் முறைகளும் மலர்களும் அவர்களுக்குக் கைகொடுத்தன. மரபு முறைகளையும் பயிர்களையும் மீட்பதில் ஆர்வம் கொண்ட உழத்தியர் இச்செயல்பாட்டில் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டனர்.

ம.ரை.வே. வேளாண் பணிகளைப் பிறரைக்காட்டிலும் சிறப்பாகச் செயல்பட்டுவந்த குத்தகைதாரரையும் குறுவிவசாயிகளையும் அடையாளம் கண்டது. இயற்கை வேளாண்மை பற்றிய அறிதலையும் அனுபவத்தையும் உடையோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 225 பெண்கள் கேழ்வரகையும், 110 பெண்கள் கம்பையும், 40 பேர் பழுப்புத்தினையும் தேர்ந்தெடுத்தனர். சிறுதானிய வேளாண்மையில் உள்ள பல பிரச்சனைகளைக் கூட்டமைப்பில் விவாதித்தனர். விதை முளைக்காமல் போவது, பயர்கள் உதிர்வது, அறுவடையின்போது பயிர்கள் காயமல் போவது, மழையால் விதைகள் பாழாவது, பறவைகளால் உண்ணப்படுவது என்று பல சிக்கல்களை அடையாளம் கண்டு அவற்றுக்கான தீர்வுகளையும் காண முனைந்தனர். கம்பு அவர்களுக்கு ஏற்ற பயிராக இருக்குமென்று நம்பினர்.

சிறுதானியங்கள் மானாவாரிப் பயிர்களாகவும் குறைந்த காலத்தில் அறுவடை செய்யக்கூடியனவாகவும் இருந்ததால் கூட்டமைப்புகள் இதில் ஈடுபட்டன. எதிர்காலத்தில் இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும்போதுகூட தற்சார்பை அடைந்து, உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யமுடியும் என்று நம்பினர்.

வேளாண்மைப் பணிகளில் பெண்களின் பங்கு குறைத்தே மதிப்பிடப்படுகிறது. பிழைப்புக்கான போராட்டத்தில் பெண்களால் தங்களை முன்னிறுத்த முடிவதில்லை. வின்ஸ் அமைப்பு அவர்களைப் பயிற்றுவிப்பதிலும், அவர்களது நம்பிக்கை வளர்ப்பதிலும், உரிமைகளை உறுதிசெய்வதிலும், சவால்களைச் சந்திக்கவும் உதவிசெய்து இப்பெண்கள் ஒன்றிணைய வழிவகுத்தது. வேளாண்மைத் துறை அதிகாரிகளோ வல்லுனர்களோ செல்லாத கிராமங்களுக்குக்கூட வின்ஸ் அமைப்பு சென்றது.

உழத்தியர் மூலமாகப் பசிக்கெதிராகப் போராடுவது சாத்தியம் என்பதையும் அவர்களுக்கு நல்ல, போதுமான உணவு பெறுவதற்கான உரிமைகள் உண்டு என்பதை வின்ஸ் உணர்ந்தது. வேளாண்மை சார்ந்த பணிகள் என்பதைவிட பாலினம் சார்ந்த புரிதல் தனித்துத் தெரிகிறது. பெண்கள் தங்களை ஆற்றல்மிக்கத் தனித்துவமானவர்களாகக் காண ஊக்குவிக்கிறது. உடல்நலத்துக்கு உணவே அடித்தளம் என்பதை வலியுறுத்துகிறது. உணவு உற்பத்தியாளர்களாக அவர்கள் எல்லாருக்குமான உணவுப்பாதுகாப்பை உறுதிசெய்கின்றனர்.

13. பொருளாதார ஹப்பூர் உழத்தியரின் பொருளாதார ஒருங்கிணைவையும் தற்சார்பையும் நோக்கிய பயணம்

எழுதியவர்: சுலேகா சிங்

பின்னணி

ஏக்சன் இந்தியா ஒடுக்கப்பட்ட சமூகங்களிலுள்ள பெண்கள், இளையோர், குழந்தைகள் ஆகியோருடன் பல பத்தாண்டுகளாக அவர்களது உடல்நலம், உரிமைகள் சார்ந்து பணிசெய்து வருகின்றது. பெண்களுக்கு பொருளாதார, சமூக, கருத்தியல் ரீதியாக வலுச்சேர்க்கவும் அதிகாரப்படுத்தவும் 2011ம் ஆண்டில் தில்லியிலிருந்து உத்தர பிரதேசத்தின் ஹப்பூர் வட்டத்துக்குப் பணி விரிவடைந்தது. அவர்கள் உழத்தியரின் பிரச்சனைகளைத் தீர்க்க முனைந்தனர்; கண்ணுக்குப் புலப்படாத பணிக்கும் பங்குக்கும் அங்கீகாரம் பெற்றுத்தருவதற்காக 4 கிராமங்களிலிருந்து 200 பெண்களை ஒருங்கிணைக்க விழைந்தனர். வேளாண் பணியாளர்களாக இருந்த 10-12 பெண்களைக் கொண்ட அணி இப்போது இச்செயல்பாட்டை வழிநடத்துகின்றனர்.

கோவிட் காலங்களில் இடையீடுகள்

குழுவாகக் குத்தகைக்கு எடுத்து உற்பத்தி செய்யும் முறை பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டவுடன் முறிந்துபோனது. நிலவுரிமையாளர்கள் தங்களது நிலத்தைக் குத்தகைக்குத் தர விரும்பவில்லை; அவர்களது குடும்பத்தினரே வீடுதிரும்பி தங்களது நிலங்களில் பணிசெய்யத்தொடங்கினார்கள். வேளாண்மை மூலம் கிட்டிய வருமானம் நின்றுபோனதால், அந்த இடரிலிருந்து மீள குழுவிலிருந்த 10-12 பெண்கள் பிற மாற்று வாய்ப்புகளை நாட முடிவுசெய்தனர்.

அவரவர் வாழும் பகுதிகளில் வெவ்வேறு சுயவுதவிக் குழக்களைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் நறுமணப் பொருள்களையும் சுவையூட்டு பொருள்களையும் உற்பத்திசெய்யும் மாற்றுப் பொருளாதார நிறுவனத்தை நிறுவ முடிவுசெய்தனர். அவர்கள் தத்தமது சுயவுதவிக் குழுக்களிலிருந்து கடன்பெற்று ஒன்றாகச் சேர்த்து கறிமசால் பொருள்கள் வாங்கி மதிப்புக்கூட்டி, பொட்டலம் கட்டி, சுற்றுவட்டாரத்தின் 20 கிராமங்களைச் சேர்ந்த உள்ளூர்ச் சந்தைகளில் சில்லறை விற்பனை செய்தனர். அவர்களது பொருள்களின் உயர்ந்த தரம் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றுக்கான வாடிக்கையாளர் தேவை அதிகரித்தது. அவர்களது விநியோகச் சங்கிலி தில்லியின் வாடிக்கையாளர்வரை நீண்டது. தேசியத் தலைநகர்ப் பகுதியில் 900 வீடுகளுக்கு சமூகச் செயல்பாட்டு வலைப்பின்னலின் மூலமாக தொடர்ந்து வழங்கிவந்தனர். அவ்வப்போது கிடைக்கும் எதிர்வினைகளால் தொடர்ச்சியான சந்தையை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது.

இடையீட்டின் தாக்கங்கள்

ஹப்பூர் வட்டம் தில்லியின் அருகில் உள்ளது. தில்லித் தேசியத் தலைநகர்ப் பகுதியில் மாற்றுப் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடுசெய்ததன்மூலமாக இப்பெண்கள் இந்த நெருக்கடியைக் கடக்க முடிந்தது. பொருளாதார நெகிழ்வுறுதிக்குக்கான புதிய வழிகளை ஆய்ந்துபார்த்தனர். ஏற்கனவே உள்ள நிறுவனத் தொடர்புவட்டத்தின்மூலமாகத் தற்சார்புக்கும் வேலைவாய்ப்புக்கும் ஒருங்கிணைவை வலுப்படுத்துவதற்குமான வாய்ப்புகளை அவர்களால் ஏற்படுத்த முடிந்தது. ஒவ்வொரு பெண்ணும் கடன்வாங்கி மூலப்பொருள்களில் முதலீடு செய்தனர்; நறுமணப் பொருள்களை அரைப்பதற்கும் உற்பத்தியைப் பல்வேறு வழிகளில் விற்பனை செய்யவும் ஒன்றாகப் பணியாற்றினர். அவர்கள் மேலும் விரிவடைந்து கோதுமையும் வாங்கி, மதிப்புக்கூட்டி இலாபத்துக்கு விற்றனர்.

விரிவாக்கம்

இப்பணியிலிருந்து கிடைத்த பொருளாதார நிலைத்தன்மை கோவிட் இடரின்போது தளராது செயல்படவும் தங்கள் கூட்டுமுயற்சியை விரிவாக்கவும் இக்குழுவுக்குப் பெரிய ஊக்கமாக அமைந்தது. இப்போது தலா 12-15 பெண்களைக் கொண்ட 75 சுயவுதவிக் குழுக்கள் அவர்களது உற்பத்தியை வாங்கவிழைகின்றன; இது ஒரு நிலையான தேவையையும் வருமானத்தையும் உறுதிசெய்கிறது. பிற கிராமங்களுக்கும் தில்லி முழுவதும் தங்களது சந்தையை விரிவு செய்வதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து வருகின்றனர். விரிவாக்கம் செய்து மேலும் பல பெண்களை ஈடுபடுத்துவதற்கான வணிகத்திட்டமும் தயாரித்துள்ளனர்.

விளைவுகள்

இப்பெண்கள் கூட்டமைப்பு இப்போது சீரகம், ஓமம், வெந்தயம், மக்காச்சோளம், கம்பு, வெல்லம், கடுகெண்ணெய், கடலைப்பருப்பு, சுண்டல், அரிசி, பருப்புகள் என்று பல உணவுப்பொருள்களை விற்பனை செய்கின்றனர். மதிப்புக்கூட்டி, பதப்படுத்தி, சந்தைப்படுத்தி ஒருங்கிணைவுப் பொருளாதாரத்தின் வாயிலாக இடர்ப்பாட்டிலிருந்து மீளும் வழியைக் கற்றுவிட்டனர். படிப்படியாக விளைநிலங்களை மீண்டும் குத்தகைக்கு எடுத்து, கூட்டாக இயற்கை வேளாண்மை செய்து தமது தேவைகளுக்கும் தங்களது வணிகத்துக்கும் உற்பத்தி செய்வது என்ற திட்டத்தில் உள்ளனர். அதிக விலையும் வளர்ச்சி தரும் பிற பலன்களையும் கொண்ட நகர்ப்புறச் சந்தைகளுக்கு விரிவாக்கம் செய்யும் திட்டமும் உண்டு. வணிகத்திட்டமிடல், விலை நிர்ணயம், சந்தைப்படுத்துதல் ஆகிய புதிய திறன்களைப் பெற்றது அவர்களுக்கு நம்பிக்கையையும் பொருளாதார நிலைத்தன்மையையும் கொடுத்து, எதிர்காலத் திட்டமிடலுக்கான கருவிகளையும் உருவாக்கித்தந்துள்ளது. இயற்கை உரங்களையும் உள்ளூர் விதைகளையும் பயன்படுத்தும் இயற்கை வேளாண்மையும் மதிப்புக்கூட்டலும் செய்யும் பெண்கள் நிறுவனமாக வளரும் நம்பிக்கை கொண்டுள்ளனர்; அதன்மூலம் வேதிப்பொருள் நிறைந்த வேளாண் முறையை மாற்றி எல்லாருக்குமான உடல்நலனை அடையமுடியும். பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிற பெண்களை ஈடுபடுத்துதல், நிலையான வாழ்வாதாரங்களை உறுதிசெய்தல், தங்களது சமூகங்களிலுள்ள பெண்களின் உடல்நலத்தை மேம்படுத்துதல் ஆகியவையும் நோக்கங்களாகத் தொடர்கின்றன. விதைவங்கிகளை ஏற்படுத்தி, உழத்தியரின் நலத்தையும் மதிப்பையும் பேணும் செயல்பாடுகளுக்கான திட்டங்களும் உள்ளன. தனிநபர்களாகச் செய்ய முடியாத செயல்களும் திறன்களும் வளங்களும் கூட்டமைப்பின் மூலமாகச் சாத்தியமாகியுள்ளன. சந்தைக்கு நெருக்கமாக இருப்பதும் அவர்களது செயல்முறைகளை திறம்பட நிர்வகிக்க உதவியாக இருந்தது.

படிப்பினை

ஏற்கனவே இருந்த திறன்களையும் இயற்கை வளங்களையும் பயன்படுத்துவதன் மூலம் நெகிழ்வுறுதி ஏற்பட்டுள்ளது. கூட்டு ஒருங்கிணைவுகள் தங்களது வலிமைகளைப் பயன்படுத்த ஏதுவாக இருந்துள்ளன. உள்ளூர்த் தேவைகளுக்கும் சந்தை நிலவரத்துக்கும் ஏற்ப தரமும் விலையும் மாற்றப்பட வேண்டும் என்பதைக் கற்றுள்ளனர். இப்பெண்களின் பொருளாதார, சமூக அதிகாரப்படுத்துதலுக்கான கூட்டு ஒருங்கிணைவை ஏற்படுத்துவதில் இந்நிறுவனம் புதிய நம்பிக்கையை அளித்துள்ளது.

படிப்பினைகளும் முன்செல்லும் பாதையும்

இத்தொகுப்பிலுள்ள நிலைஆய்வுகள் பெண்கள் 'பொதுவான' வழிமுறைகளிலிருந்து மாறுபட்டு இந்த கோவிட் பொதுமுடக்கத்தின்போது எப்படி வழிநடத்தியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. இத்தகைய பெண்கள்-தலைமையேற்ற கதைகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது ஏராளம்..

எல்லாக் கதைகளும் பிரதிபலிக்கும் புள்ளிகள்:

1. முதல் வேலையாக எல்லாப் பெண்கள் கூட்டமைப்புகளுக்கு தங்களது உறுப்பினர்களுக்கும் பிற ஏழை/தனித்த பெண்களுக்கும் கடினமான காலங்களில் உணவுத் தானியங்கள் கிடைப்பதை உறுதிசெய்தனர்.
2. பெண்கள் கூட்டமைப்புகளும் பெண்கள் தலைமையும் நெருக்கடி நேரங்களில் அதிக பெண்களைச் சென்றடைவதற்கான புதிய எண்ணங்களோடு வருதுடன், மிக வறிய, மிக பாதிப்புக்குள்ளாகக்கூடிய பெண்களின் தேவைகளை உணர்ந்து, தங்களது செயல்முறைகளையும் இடையீடுகளையும் அப்பெண்களின் தேவைகளுக்கேற்ப மாற்றிக்கொண்டனர் என்பதையும் இதிலிருந்து கிடைக்கும் படிப்பினைகள் காட்டுகின்றன. பரிவுடனும் புரிந்துணர்வுடனும் செயல்நேர்த்தியுடனும் பெண்களைச் சென்றடைந்து, பாதிப்புகளின் தாக்கத்திலிருந்து குணமடையச்செய்வதில் பெரும் பங்கினை பெண்கள் கூட்டமைப்புகள் ஆற்றின.
3. இன்னொரு முக்கியமான பாடம், பெண்கள் கூட்டமைப்புகளால் நிர்வகிக்கப்படும் உள்ளூர், அதிகாரம் பரவலாக்கப்பட்ட மாதிரிகள் பெண்களுக்கு உணவு கிடைப்பதை உறுதிப்படுத்த மிகவும் அவசியமாகின்றன - குறிப்பாக, பருவச்சூழல் நிச்சயமற்று உள்ளதால், விநியோகச் சங்கிலிகள் அறுந்துபோகலாம் என்பதால். பெண்களால் நிர்வகிக்கப்படும் வட்டப் பொருளாதாரத்தின் சிறிய மாதிரி நீடிக்கவல்ல விநியோகச்சங்கிலிக்கு வழிவகுக்கலாம்.
4. தணல், கேரளா; WGLWO மற்றும் HDRC, குஜராத்; கொர்ச்சி மகாசபை, மகாராட்டிரம் ஆகிய நிலைஆய்வுகளிலிருந்து கிடைக்கும் படிப்பினைகள் பெண்கள் எப்படி குறுகிய காலநோக்கைத் தாண்டி, சற்றே நீண்டகால நோக்குடன் சிந்தித்து, உள்ளூரில் உற்பத்தியை வலியுறுத்தி, இயற்கைமுறை காய்கறித் தோட்டங்கள், அடுத்த பருவத்துக்குத் தேவையான விதைகள் கிடைக்கச்செய்வது போன்றவற்றைச் செயல்படுத்தி பொதுமுடக்கத்தின்போது உணவு கிடைக்க வழிசெய்தனர் என்பதையும் காட்டுகின்றன.
5. தில்லி மக்காம், யமுனை கத்தார் ஆகிய நிலை ஆய்வுகள் ஊரக-நகர்ப்புற தொடர்ச்சியையும் நெருக்கடிக்காலங்களில் புரிந்துகொள்ள வேண்டிய தேவையைச் சுட்டுகின்றன. நிர்வாகத்தின் கண்களில் வேளாண் சமூகப் பெண்கள் தட்டுப்படவே இல்லை. இந்த இரண்டு சான்றுகளிலும், கிராமப் பெண்களும் நகர்ப்பகுதிப் பெண்களும் கூட்டணிகள் அமைத்து, நிவாரணப் பணிகளில் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து, ஊரக-நகர்புற ஒருங்கிணைவுக்கு நீண்டகால நோக்கில் வழிகாட்டியுள்ளனர்.

ஒரு கூட்டமைப்பாக மக்காம் களமட்டத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதோடு, பிற தளங்களிலும் பணியாற்றியது - தேசிய மனித உரிமை ஆணையம் (NHRC), நிதி அயோக், மாநில அரசுகள் ஆகியோரிடம் உணவு சார்ந்தும் வேலைவாயப்பு சார்ந்தும் அமைப்புகளை வலுப்படுத்தத் தனது பரிந்துரைகளை வழங்கியது. உணவு வழங்கும் அமைப்பு, பொது விநியோக சேவை ஆகியவை எல்லாரையும் சென்றடையவேண்டும், ஆவணங்கள் இருப்பவர்களுக்கு மட்டுமே சுருக்கக்கூடாது என்ற தனது கோரிக்கைகளை முன்வைத்தது. தானியங்கள் மட்டுமன்றி ஊட்டச்சத்துமிக்க உணவுவகைகளையும் சேர்க்க வேண்டும் என்றது. மக்காமின் முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று, பொதுப் பணிகளை விரிவுபடுத்தி வேலைவாய்ப்பு உறுதியை வழங்க வேண்டும்; உழத்திகளின் உற்பத்தி சாதனங்களை வளப்படுத்தும் பணிகளும் அதில் அடங்கியிருக்கவேண்டும்.

நீண்டகாலநோக்கில், இது வலுவான சூழலியல் பண்புகள் கொண்ட பெண்களுக்கான ஊரக வாழ்வாதாரங்களை வலுப்படுத்தி, ஆதரவு நல்கி, மறுகட்டமைப்பு செய்வதற்கான வாய்ப்பாக அமையலாம். வேளாண்மையிலும், பெண்கள் சார்ந்திருக்கும் நீராதாரம் மற்றும் பிற பொது வளங்களிலும் நல்ல முதலீடுகள் செய்யவேண்டியிருக்கும். இந்த வளங்களைப் பெண்கள் பயன்படுத்துவதற்கான அனுமதி தரும் கொள்கைகள் வகுக்க வேண்டும்; அவற்றை அவர்களுக்கு மறுப்பதைத் தவிர்க்கவேண்டும். பெண்களின் மனிதஉரிமைகளை கவனப்படுத்தி, தற்போதைய வளர்ச்சி மாதிரியை மாற்றி, அதிகாரம் வளம் ஆகியவற்றை மறுகற்பனை செய்து மறுபங்கீடு செய்வதற்கான தொலைநோக்கு வேண்டும்.

மிக முக்கியமாக, சமூக, பொருளாதார ஒருங்கிணைவுகளுக்கான வழிமுறைகளை நாடுவதற்கு அரசாங்கம் பெண்கள் வழிநடத்தும் இடையீடுகளிலிருந்து கற்றுக்கொண்டு, சேர்ந்து செயல்பட முன்வரவேண்டும் என்று நம்புகிறோம்.

இந்த நெருக்கடியின் இடையே கடுமையாகப் போராடி உறுதியுடன் புத்தாக்கம் செய்து, எப்போதும் மாற்றுகள் உள்ளன என்பதை நமக்குக் காட்டிய உழத்திகளும் அவர்களது கூட்டமைப்புகளும் இந்த ஆவணத்துக்கு முதல் காரணம்.

இந்த ஆவணம் இவர்களது பங்களிப்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது: சி.பனுஜா, ரெட்ஸ், குமாரிபாய் ஜம்கட்டன், கொர்ச்சி மகாசபை; சேஜல் தண்ட், நீட்டா ஹர்திகர், ஆனந்தி; டாக்டர்.சோமா கே.பி., சுலேகா (ஏக்சன் இந்தியா); முபாசிரா சைதி; சுவர்ணா தாம்லே, நிர்மலா காத்வட்டே, பிரிக்கிரிதி; விக்ரம் சிங், ரிஷா ராமச்சந்திரம், முபாசிரா சைதி; HDRC, WGWLO, உத்தன், குஜராத்; தணல், கேரளா.

மெய்நிகர் கூடுகையை ஒருங்கிணைத்து மக்காம் இக்கதைகளைத் தொகுக்க உந்துதலாக இருந்த GTAவுக்கு நன்றி.

இந்த முழு முயற்சியும் ஒருங்கிணைத்தது சில்பா வசவடா, சீமா குல்கர்ணி; மக்காமின் தேசிய ஒருங்கிணைப்பு அணியின் உறுப்பினர்களான உஷா சீத்தாலட்சுமி, டாக்டர் சோமா கே.பி., ஆஷாலதா ஆகியோர் அவர்களுக்கு தகவல்கள் வழங்கியுதவினர். மக்காமின் தேசிய ஒருங்கிணைப்பாளர், கார்கி மங்குல்கருக்கும், மக்காமிலுள்ள பிற நண்பர்களுக்கு இந்த எண்ணத்துக்கு ஆதரவாக இருந்ததற்கு நன்றிகள்.
மக்காமைத் தொடர்பு கொள்ள: கார்கி மங்குல்கர், mahilakisan.makaam@gmail.com / 9604779666

இத்தொகுப்பினை வடிவமைத்த நவீத் ததனுக்கும் நன்றி. தமிழில் மொழிபெயர்த்தவர்: த. கண்ணன்

இப்பதிப்புக்கு ஹென்றிக் போல் அறக்கட்டளை (Heinrich Boll Foundation) , மிசெரியோர் (Misereor) ஆகியோரின் ஆதரவு கிடைத்தது.

மேற்கோள் காட்ட: விகல்ப் சங்கம், நம்பிக்கையை விதைத்தல்: பெண்கள் கூட்டமைப்புகள் மாற்றத்துக்கான பாதைகளை உருவாக்குகின்றனர் - 'சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்: பெருந்தொற்றுக்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்' தொடரின் நான்காவது தொகுதி; விகல்ப் சங்கம் மையக் குழு, பூனா, மார்ச் 2021.

இது காப்புரிமையற்ற பதிப்பு. வணிகநோக்கற்ற செயல்பாடுகளுக்காக யார்வேண்டுமானாலும் தாராளமாகப்பயன்படுத்தலாம். உரிய மேற்கோள்களோடு அங்கீகாரம் கொடுத்தல் நலம். மேற்கோள் காட்டும்போது இதே போல காப்புரிமையற்று இருக்கவேண்டும். .

இத்தொடரின் பிற தொகுப்புகளைக் காண இங்கே சொடுக்கவும் (பல மொழிகளிலும், படக்கதை வடிவிலும்):

சாதாரண மக்களின் அசாராதணமான பணிகள்: தொகுப்பு 1, படக்கதை வடிவம்

சமூக வன உரிமைகளும் பெருந்தொற்றும்: வழிநடத்தும் கிராம சபைகள்: தொகுப்பு 2, படக்கதை வடிவம்

மேற்கு இமயப் பகுதியில் பெருந்தொற்றுக்கெதிரான நெகிழ்வுறுதி: தொகுப்பு 3

இளைஞர்களின் நம்பிக்கை, நெகிழ்வுறுதி, கூட்டுக்கனவுகள்: தொகுப்பு 5

விகல்ப் சங்கம் நியாயமான, சமநீதி கொண்ட, வளங்குன்றா வழிகளின் மூலம் மனித, சூழலியல் நலம் விழையும் இயக்கங்கள், குழுக்கள், தனிநபர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் ஒரு தளம். இது தற்போதைய வளர்ச்சி மாதிரியையும், அதன் அடிநாதமாக உள்ள ஏற்றதாழ்வுகளையும் அநீதியையும் கொண்ட அமைப்பினையும் நிராகரிக்கிறது. நடைமுறையிலும் நோக்கத்திலும் புதிய மாற்றுகளுக்கான தேடலில் உள்ளது. மையக் குழுவில் நாடெங்கிலுமிருந்து 70 அமைப்புகளும் இயக்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். (பட்டியல் கீழே)

மேலும் விபரங்களுக்குப் பார்க்கவும்:
http://www.vikalpsangam.org/about/

www.vikalpsangam.org

- ACCORD (Tamil Nadu)
- Alliance for Sustainable and Holistic Agriculture (national)
- Alternative Law Forum (Bengaluru)
- Ashoka Trust for Research in Ecology and the Environment (Bengaluru)
- BHASHA (Gujarat)
- Bhoomi College (Bengaluru)
- Blue Ribbon Movement (Mumbai)
- Centre for Education and Documentation (Mumbai)
- Centre for Environment Education (Gujarat)
- Centre for Equity Studies (Delhi)
- CGNetSwara (Chhattisgarh)
- Chalakudypuzha Samrakshana Samithi / River Research Centre (Kerala)
- ComMutiny: The Youth Collective (Delhi)
- Deccan Development Society (Telangana)
- Deer Park (Himachal Pradesh)
- Development Alternatives (Delhi)
- Dharamitra (Maharashtra)
- Ekta Parishad (several states)
- Ektha (Chennai)
- EQUATIONS (Bengaluru)
- Extinction Rebellion India (national)
- Gene Campaign (Delhi)
- Goonj (Delhi)
- Greenpeace India (Bengaluru)
- Health Swaraaj Samvaad (national)
- Ideosync (Delhi)
- Jagori Rural (Himachal Pradesh)
- Kalpavriksh (Maharashtra)
- Knowledge in Civil Society (national)
- Kriti Team (Delhi)
- Ladakh Arts and Media Organisation (Ladakh)
- Local Futures (Ladakh)
- Maadhyam (Delhi)
- Maati (Uttarakhand)
- Mahila Kisan Adhikar Manch (national)
- Mahalir Association for Literacy, Awareness and Rights (MALAR)
- Mazdoor Kisan Shakti Sangathan (Rajasthan)
- National Alliance of Peoples' Movements (national)
- Nirangal (Tamil Nadu)
- North East Slow Food and Agrobiodiversity Society (Meghalaya)
- People's Resource Centre (Delhi)
- Peoples' Science Institute (Uttarakhand)
- Revitalising Rainfed Agriculture Network (national)
- reStore (Chennai)
- Sahjeevan (Kachchh)
- Sambhaavnaa (Himachal Pradesh)
- Samvedana (Maharashtra)
- Sangama (Bengaluru)
- Sangat (Delhi)
- School for Democracy (Rajasthan)
- School for Rural Development and Environment (Kashmir)
- Shikshantar (Rajasthan)
- Snow Leopard Conservancy India Trust (Ladakh)
- Sikkim Indigenous Lepcha Women's Association
- Social Entrepreneurship Association (Tamil Nadu)
- SOPPECOM (Maharashtra)
- South Asian Dialogue on Ecological Democracy (Delhi)
- Students' Environmental and Cultural Movement of Ladakh (Ladakh)
- Thanal (Kerala)
- Timbaktu Collective (Andhra Pradesh)
- Titli Trust (Uttarakhand)
- Tribal Health Initiative (Tamil Nadu)
- URMUL (Rajasthan)
- Vrikshamitra (Maharashtra)
- Watershed Support Services and Activities Network (Andhra Pradesh/Telangana)
- Youth Alliance (Delhi)
- Yugma Network (national)
- Let India Breathe
- Travellers' University
- Dinesh Abrol
- Sushma Iyengar